உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்

திங்கள் வெளியீடு

துணர் ௰௬ { விக்கிரம—பங்குனி } மலர் ௰௨


| | | |
|---|---|---|
| க. | பொழிற்றொண்டர் கருத்துரைகள் | 431 |
| உ. | கோபால பட்டர் | 434 |
| ௩. | பிராகுவியர் | 436 |
| ௪. | சுவடி மதிப்பு | 438 |
| ௫. | பண்ணும் திறனும் | 439 |
| ௬. | காட்சி யளவை | 449 |
| எ. | கலிங்கப்போரும் காலிங்க வீரரும் | 458 |
| அ. | மெய்கண்ட சாத்திர மாநாடு | 467 |
| ௯. | டாக்டர் ஐசக் தம்பையா | 468 |
| ௰. | கரந்தைத் தமிழ்ச் சங்கம்-விரிவுரைக் கூட்டம் | 470 |
| ௰க. | நன்கொடைகள் | 471 |
| ௰க. | தொல்காப்பியம்—பொருள் | 29—36 |


பொழிற்றொண்டர்:

செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள், இராவ்சாகிப்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்.

கரந்தைக் கூட்டுறவு மின் இயக்கிப் பதிப்பகம், தஞ்சை.

உ

# தமிழ்ப் பொழில்

**தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு**

| துணர் ௧௬ | விக்கிரம—பங்குனி | மலர் ௧௨ |
| --- | --- | --- |

உ

## பொழிற்றொண்டர் கருத்துரைகள்

### பேரறிஞர் (Dr.) ஐசக் தம்பையா

**இலங்கைத்** தீவின் கலைச் செல்வர்களில் ஒருவராகிய பேரறிஞர் தம்பையா, 1941, பிப்பிரவரி, 19ஆம் நாள், புதன் கிழமை இரவு, காலஞ் சென்றமை அறியப் பெரிதும் வருந்துகிறோம்.

தாயுமானார் திருப்பாடல்களை இவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, தக்க முகவுரை, குறிப்புக்களுடன் வெளியிட்டமையை நம் நாடும் அயல் நாடும் நன்கறியும். காலஞ் சென்ற பெரியாரைப் பற்றிய 'ஈழகேசரி'யின் குறிப்புக்களைப் பிறிதோரிடத்தில் தந்துள்ளோம்.

### தமிழ்ப் பொழில்

**இறைவன்** திருவருளாலும், தமிழ் மக்கள், தமிழ்ப் புலவர்கள் ஆதரவாலும், நம் பொழில் பதினாறு ஆண்டு, இப் பங்குனித் திங்களோடு, நிறையப்பெற்றுள்ளது. பொழில் தோன்றிய காலத்தும், பின்னும், எங்கெந்த வழிகளிலெல்லாம் பொழில் தமிழகத்திற்குப் பயன்படவேண்டுமென்று எண்ணினோமோ, அந்தந்த வழிகளிலெல்லாம் பயனளித்துள்ளது எனக் கூறுவதற்கில்லை. ஒருவாறு காலந்தள்ளி வந்தது என்றே நாம் கூறலாம். பொழிலைப்பற்றி அன்பர்கள் கூறும் குறைகளோ பல. நாம் உணர்ந்த குறைகளோ அவற்றினும் பல. பொது

வாக நோக்குமிடத்து, இக் குறைகளுக்கெல்லாம் எம் ஊக்க மின்மையே காரணமென்று நாம் கருதும் கடப்பாடுடையோம். அன்பர்கள் கூறும் குறையில் முதலாவது, எல்லோரும் அறிந்துகொள்ளும் எளிய தமிழ் நடையில் பொழில் வெளிவரவில்லை என்பதே யாகும். இக் குறைக்கு நாமே காரணம். அன்பர்களை யெல்லாம் பொழிற் கட்டுரைகளைப் படித்து மகிழும் தமிழ்ப் பயிற்சி யுடையவராகச் செய்யவேண்டிய கடமையை இதுகாறும் நாம் செய்யவில்லையாயின், அது வேறு யாவர் குறை? ஆறுயிரம் மைலுக் கப்பா லுள்ள ஆங்கில மொழியையும், ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பெழுந்த வடமொழி நூல்களையும் இடர்ப்பாடு சிறிது மின்றிக் கற்கவும், கற்று மகிழவும், பிறர்க்குச் சுவைபடக் கூறிப் பரப்பவும், ஆற்றலுடைய நம் தமிழகத்துத், தமிழ் மொழியின் தூய சொற்கள் பொருள் விளக்கிப் பயன்தர ஆற்ருவாயின், அது யாவர் குறை? பயிற்சிக் குறை யன்றே? சொல்லாலும் பொருளாலும் பேசவும் எண்ணவும் இனிமை தரும் எம் தாய்மொழி இன்று இவ்வாரு யிற்றே என்று யாம் வருந்துவதால் பயனென்? ஒரோவழி தமிழோடு தொடர்புடைய வேற்று நாட்டாரும் இம் மொழியின் நன்மை யுணர்ந்து போற்றுமிடத்து, நம்மவர் 'யாம் பொருளுணர மாட்டோம்; யாம் பொருளுணர ஆற்றேம்.' எனக் கூறுவது, இதுகாறும் எழு வியப்போடு நின்ற இவ்வுலகத்து எழுந்த எட்டாவது வியப்பென்றே எண்ணுகிறேம்.

மொழிநூற் புலவர்களில் முதலணியில் வைத்தெண்ணக் கூடிய **உவிட்னி** என்னும் பேராசிரியர், எண்ணவும் பேசவும், தானறிந்த ஐரோப்பிய மொழிகளைவிடத், **தமிழ்** மொழியே சிறப்புடையது என்று உயர்ந்த கல்வியும், பேசுவதிலும் எழுதுவதிலும் சிறந்த வன்மையுமுடைய ஒரு அமெரிக்கர் பாராட்டிக் கூறியதாகக் கூறுகிறுர்*. நம்மவரோ வேறு வகையாகக் கருதுகின்ருர்!

*'......the author has been informed by an American who was born in southern India and grew up to speak its language vernacularly along with his English, a man of high education and unusual gifts as a preacher and writer, that he esteemed the Tamil a finer language to think and speak in than any European tongue known to him.'——*The Life and Growth of Language* by *William Dwight Whitney*, pp. 244-5.

இது நிற்க, இனி ஒருவாறு மனவெழுச்சிகொண்டு முன்னேக்குவாம். பொழிலின் தொண்டு, நம்மவரை நம்மொழியில் ஆர்வம் கொள்ளச் செய்வதிலிருந்து, மக்கட் டொகுதியின் அறிவு நிதிக்கு நம்மவர் கொடையும் செம்பாகமாகச் சேர்க்கப் பெறவேண்டுமென்பது வரையும் ஆகும். இவற்றினிடையே யுள்ள நிலைகள் பல. நம் பழைய வரலாறுகளை அறிதல்வேண்டும். பரந்த உலகத்தின் பழைய நிலை, இன்றைய நிலை, இடையிடையே இருந்த இயக்கங்கள், அவற்றின் நலந் தீங்குகள் முதலியவற்றைத் தெரிதல் வேண்டும். நம் மிலக்கியத்தோடு பிற இலக்கியத்தின் நயங்களையும் உணர்ந்து மகிழ்தல்வேண்டும். உலக இலக்கியங்களில் உயர்ந்தவற்றேடு ஒரு படியில் வைக்கத் தக்க இலக்கியங்களை நாம் ஆக்கவேண்டும். அறிவு நூல்களின் பல பகுதிகளையும் நம்மவர் நம்மொழியிலேயே கற்பதற்கு வகை தேடுவதோடு, நம் மொழியிலிருந்து பிறமொழியில் ஆக்கிக்கொள்ள வேண்டிய உயர்ந்த கருத்துக்களையும் நூல்களையும் ஆக்கும் நிலைக்கு வரவேண்டும். அறிவு நூல்களில் உலகம் போற்றும் பேரறிஞர்கள் தமிழகத்தில் பிறந்துள்ளார்கள். அவர்களைப் போற்றும் உலகம் தமிழைப் போற்றவில்லை. காரணம் நாம் சொல்லவேண்டுமா? இந்நோக்கங்களையெல்லாம் எண்ணியவுடனே எய்த முடியாது என்பதை யாம் உணராததல்ல. ஆனல், எண்ணினுல் எய்த முடியாததல்ல என்பதே எம் உறுதி.

இப் பெருஞ் செயல்களுக்கெல்லாம் ஒருவாறு துணையாக நிற்கும் நிலையில் நம் பொழில் சித்திரைத் திங்களிலிருந்து வரவிருக்கிறது. இலக்கியப் பகுதி, வரலாற்றுப் பகுதி, மொழி பெயர்ப்புப் பகுதி, உலக இயக்கங்கள், அறிஞர் உரை, முதலிய பல பகுதிகளும், அவ்வத் திங்களில் தோன்றும் தமிழக நிகழ்ச்சிகளைப் பற்றிய குறிப்புக்களும், நூல்களைப் பற்றிய ஆராய்ச்சியும், தக்க அறிஞர்களைத் துணைக்கொண்டு வெளியிட எண்ணியுள்ளோம். போரால் குழப்ப முற்ற இக்காலத்து, நூல்கள் வெளியீட்டிற்கு உள்ள இடையூறுகள் பலவென்பதை நம் அன்பர்கள் அறிவார்கள். இது காறும் நேர்ந்த பொருட்செலவினும்

இனி நேரக் கூடியது அதிகமாகும். இந்த நிலையில், எம் கருத்து இனிது நிறைவேறுவது அன்பர்களது ஆதரவைப் பொருத்தே இருக்கிறது. ஓராயிரம் படிகளேனும், ஒவ்வொரு திங்களிலும், வெளியிடக் கூடியதாக விருந்தால், அதிக முட்டுப்பா டின்றி நாம் வெளியிடக்கூடும். அன்பர்கள் இதனை மனத்துட்கொண்டு, இதுகாறும் போற்றி வந்ததுபோல் போற்றி வருவதுடன், இன்னும் பல அன்பர்களையும் இதன் கையொப்பக்காரர்களா கச் சேர்த்து ஆதரவளிக்க வேண்டுகின்றோம். பொழிலின் நறு மணம் நாற்றிசையும் பரந்து உலகை மகிழ்விக்கத் தமிழ்த்தெய் வம் துணை செய்வதாக!

## கோபால பட்டர்

கூரீசர் அல்லது கூரத்தாழ்வார் என்பார் இராமானுச ரின் நண்பரும், துணைவருமாவர். இவர் காஞ்சிபுரத்தின் அண்மையி லுள்ள கூரம் எனும் சிற்றூரி லிருந்தவர். தனது உடைமைகள் அனைத்தையும் துறந்து, இராமானுசரின் தொண் டராய் இருந்து வந்தனர். குலோத்துங்க சோழன் இராமானு சரைக் கொடுமையால் வருத்தியபோது, அக்கொடுமை யனைத் தையும் தானே ஏற்றனர். கூரீசர் மிக்க புலமை வாய்ந்தவர். வைணவர்கள் அருமையுடன் போற்றும் ஐந்து தோத்திரங்கள் இவரால் வடமொழியில் இயற்றப்பெற் றுள்ளன. இவருடைய மூத்த மகன் பராசர பட்டர், பல துதிகள் பாடிய தன்றி, வேதாந்த தேசிகர் மேற்கோளாக ஆளும் தத்துவ ரத்தினகரம் எனும் தத்துவ நூலையும் இயற்றி யிருக்கின்றார். சுதர்சன பட் டர் என்பார் கூரீசரது பேரனின் மகன். இராமானுசர் இயற் றிய சீபாடியத்துக்குச் சுருதிப் பிரகாசிகை எனும் அகல உரையும், பாகவத புராணத்தின் உரையும், இவர் இயற்றினர்.

நாலாயிரப் பிரபந்தத்தின் உரைகளையும், தனியன்களை யும் ஆராய்வதிலிருந்து, கூரீசரின் 9ஆவது தலைமுறையில் திரு

வேங்கட பட்டர் என ஒருவர் வாழ்ந்த செய்தி அறியப்படுகிறது. சூரீசர் 12ஆவது நூற்றாண்டின் முற்பகுதியினராதலால், திருவேங்கட பட்டர் 15ஆவது நூற்றாண்டின் கடைசியில் வாழ்ந்திருத்தல் கூடும். வங்க நாட்டுச் சைதன்னியர் சரிதத்தில் குறிக்கப்படும் வேங்கட பட்டர், சூரீசரின் 9ஆவது வழியினராய் வந்த திருவேங்கட பட்டரா யிருத்தல் பொருந்தும். இவ் வேங்கட பட்டரின் மகன் தான் கோபால பட்டர். இவர் இல்லற வாழ்க்கையில் அகப்படாதவர். கல்வி முயற்சியும், இறைவனிடத்து நிறைந்த அன்பும், இடையறாத் தொண்டுமே இவர் வாழ்க்கை.

சைதன்னியர் (1482—1533) வங்க நாட்டிலிருந்து திருவரங்கத்துக்கு வந்து, அரங்கநாதரை வழிபட்டு வந்த காலத்தில், வேங்கடபட்டர், சைதன்னியரின் பத்தியை வியந்து, தன்னுடன் உறையும்படி வேண்டினர். அதற்கு இயைந்து இருவரும் நான்கு மாத காலம் ஒருங்கே இருந்து, நலனே இறை வழிபாடு செய்து வந்தனர்.

சைதன்னியர், பிறகு, வடநாடு சென்று, பூரி, பிருந்தாவனம் என்ற ஊர்களில் வைணவ நிலையங்களை அமைத்து, வங்க நாடெல்லாம் வைணவம் பரவுமாறு தொண்டு புரிந்தனர். சைதன்னியர் காலமான பிறகு, வங்க நாட்டு வைணவர், சீரங்கத்திலே வதிந்து வந்த கோபால பட்டரைத் தமது நாட்டுக்கு அழைத்தனர். கோபால பட்டர், வங்க நாடு சென்று, பிருந்தாவனத்தில் இருந்தனர். கோயில் வழிபாடுகளை விளக்கும் அரிபத்தி விலாசம் எனும் நூலையும், தத்துவ உண்மைகளை விளக்கும் பகவத் சந்தர்ப்பம் எனும் ஆறு நூல்களையும் இயற்றினர். இவருடைய அரிய தொண்டினால், வைணவம் வங்க நாட்டில் பரவியது. 1578ஆவது ஆண்டில் இவர் இறந்தனர்.

—இந்து

## பிராகுவியர் (The Brahuis)

மோகன்-சோ-டேரோவில் கண்ட புதைபொருள்கள் நமது பண்டை நாகரிகத்தின் சிறப்புகளை விளங்கச் செய்கின்றன. அதன் சுற்றுப்புறங்களிலும், சிந்து நாட்டிலும் செய்துவரும் சோதனைகளை ஆராய்ந்துவரும், கராச்சி நகரக் காட்சி சாலையின் பாதுகாவலர் (Curator of the Karachi Municipal Museum), திரு. சி. ஆர். இராய், தென்னிந்திய திராவிட நாகரிகம், மோகன்-சோ-டேரோ நாகரிகத்திலும் மிக்க பழைமை வாய்ந்தது எனும் முடிபிற்கு வருகிறார்.

பிராகுவியர் பேசுகின்ற மொழி திராவிட மொழி யெனவே கூறத் தக்கதா யிருக்கின்றது. பிராகுவி மொழியானது திராவிட மொழிக் குழுவினது என்று அறிஞர்கள் அனைவரும் ஒப்புகின்றனர். இந்திய மொழிகளின் ஆராய்ச்சியாளராகிய கிரியர்சன் (Grierson), திராவிட மொழி பயின்றுவரும் நாடுகள், இந்தியாவின் தென்பகுதி, வங்காளம், நடு மாகாணம் என்ற நாடுகளில் சிற்சில பகுதிகள், பலூசித்தானம் எனக் கண்டிருக்கின்றனர். மொழி ஒற்றுமை ஒன்று கொண்டே இரு மக்கட் பிரிவினரும் ஒரே இனத்தவர் எனும் முடிபுக்கு வருதல் தவறு என நினைக்கும் அறிஞர்களும் உண்டு.

திரு. இராய் என்பார், நூறு பிராகுவியர்களின் உடலுறுப்புகளை அளந்து, சோதனைகள் செய்து, பிராகுவியர்கள் உடலமைப்பு திராவிடர்களுடன் பல திறத்தில் ஒப்புமை உடையது எனவும், பிராகுவியர் திராவிட இனத்தையாதல், நடுத்தரை (Mediterranean) இனத்தையாதல் சேர்ந்தவர் எனவும், ஆதியில் இவர்கள் நடுத்தரைப் பகுதியிலிருந்து போந்தவர் எனவும், ஆராய்ந்து முடித்திருக்கின்றனர். பிராகுவியரின் குடிவாழ்க்கையும், மண முறையும் இந்த முடிபையே வலியுறுத்துகின்றது. இவர்கள் நெருங்கிய உறவினத்தி லுள்ள பெண்களையே மணக்கின்றனர். தமக்குள் வேற்றினத்தவரின் குருதி கலத்தலாகாதெனும் கொள்கையில் உறைப் புள்ளவர். இதனால் தமது உடலமைப்பையும், மொழித் திறனையும் சிதையாது காத்துக்

கொண்டும் வந்திருக்கின்றனர். நடுத்தரை இனத்தவரின் தனிப் பண்புகள், பிராகுவியரில் உயர் நிலையி லுள்ளவரிடம் மிகுதி யாகக் காணப்பெறுகின்றன. நடுத்தரை இனத்தவர், பிரா குவியர், திராவிடர் ஆகிய மூவரிடமும் பொதுப் பண்புகள் மிகுதியா யிருக்கின்றன. நடுத்தரை இனத்தவரையும், திரா விடரையும் இணைக்கும் தொடர் பிராகுவியர் எனக் கருத இட முண்டு. மிகப் பழங் காலத்தில் நடுத்தரை இனத்தார் கூட்டத் தின் பகுதியினர், இந்தியாவின் வடமேற்குக் கணவாய் வழி, இந்திய நாட்டில் குடியேறினர். பிராகுவியர், தம்மைச் சூழ்ந் துள்ள இந்து-ஆப்கன் மக்களுடன் கலந்து உரு மாறிவிடாமல், தமது தனிப் பண்புகளையும், மொழிகளையும் காத்துக்கொண் டிருக்கின்றனர். அன்றியும், பிராகுவியர்களிடமும் திராவிடர் களிடமும் காணக் கூடிய தொழில் திறனும் பொதுவாயிருக் கின்றது. பல்லூழி காலம் கழிந்தும், 'கூடை முடைதல்' இவ் விருதிறத்தினரிடமும், மாறுதலடையாது, ஒரே விதமா யிருந்து வருகின்றது. பிராகுவியர் செய்து கையாளும் கூடைகள், தேன் னிந்தியத் திராவிடர் செய்வன போலவே இருக்கின்றன. கல் கத்தா காட்சிசாலையில் 8819ஆவது எண்ணுள்ள கூடை வட மேற்கு மாகாணத்தின் மேலைக் கோடியிலிருந்து கொணரப் பட்டது. இக்கூடையானது, சென்னையிலிருந்து வந்த 88ஆவது எண் கூடையுடனும், நீலகிரியிலிருந்து வந்த 7597ஆவது எண் கூடையுடனும் மிகவும் ஒத்திருக்கின்றது. இவற்றின் வேலைப் பாடும், உருவமும், பிறவும் ஒன்றே எனக் கூறலாம். இவை போன்ற கூடைகள் இந்தியாவில் வேறு எங்கணும் கிடைப்ப தின்று.

உடலமைப்பு, மொழி, வாழ்க்கைமுறை, தொழில்முறை இவற்றால் பிராகுவியரும், தென்னாட்டுத் திராவிடரும் மிகவும் ஒத்திருக்கின்றனர். மோகன்-சோ-டேரோ ஆராய்ச்சிகளும் இதே முடிபைத் தருகின்றன. பிராகுவியர், திராவிடர் ஆகிய இருவர்களின் நாகரிகமும் மோகன்-சோ-டேரோ நாகரிகத் தினும் முற்பட்டது எனவும் காணப்படுகிறது.

—இந்து.

## சுவடி மதிப்பு

### அகல்யா

மொழிபெயர்த்தவர்: பண்டித திரு. பி. மகாலிங்கம், ஆர். பி. வி.
கிடைக்குமிடம்: செங்குந்தர் புத்தக நிலையம், கோட்டாறு.
விலை: அணா 12.

**அகல்யா** என்பது வங்கமொழி மூலத்திலிருந்து இந்தி மொழிக்கு வந்து, அதனினின்று நம் மொழியில் மொழிபெயர்க்கப்பெற்ற ஒரு நூலென அதன் முகவுரையால் தெரிகிறோம்.

பழங் கதைகளைப் புதுமுறைப்படுத்தி எழுதுவது பெரும்பாலும் நன்மை பயப்பதல்ல என்பது பலர் கொள்கை. இந் நூலைப் பொருத்த வளவில் அக் கொள்கை உண்மையுடையதாகவே தெரிகிறது.

மொழிநடை சிறந்ததாக வில்லாததோடு, பிழைபட்டதாகவும் இருக்கிறது. இத்தகைய நூல்களால் மொழி வளர்ச்சிக்கோ, மக்கள் முன்னேற்றத்திற்கோ நன்மையுண்டாகுமென நாம் எண்ண முடியவில்லை.

ஒ ஒ ஒ ஒ

### தமிழணங்கு

**தமிழணங்கு** முதல் மலரின் 9ஆம் இதழ் வரப்பெற்றோம். வழக்கம் போலத் தமிழ் வளர்ச்சிக்கான கட்டுரைகளுடன் இது விளங்குகின்றது.

# பண்ணும் திறனும்.

உயர்திரு. சுவாமி விபுலாநந்தர்,
மாயாவதி, அல்மோரா, இமாலயம்.

(முற்றொடர்ச்சி: துணர் ௰௬, மலர் கக, பக்கம் 398)

**பிங்கலந்தை** நூலாசிரியர், 'குறிஞ்சி யாழ்த் திறத்தின் பெயர்—நைவளம், காந்தாரம், படுமலை, மருள், அயிர்ப்பு, பஞ்சுரம், அரற்று, செந்திறம்' எனக் கூறுவதோடு, சில திறங்களுக்குப் பரியாயப் பெயர்களுந் தருகின்றார். அவை வருமாறு:

'நைவள மென்பது நட்ட பாடை' (௩௯௦)
'படுமலை யென்பது பகரிற்கவ் வாணம்' (௩௯௨)
'அயிர்ப்பு அநுத்திர பஞ்சம மாகும்' (௩௯௩)
'அரற்றுக் குறிஞ்சி ..............' (௩௯௪)
'செந்திறஞ் செந்துருதி ...............' (௩௯௫)

குறிஞ்சி யாழ்த் திறன் வகை முப்பத்திரண்டினையுங் கூறுகிற சூத்திரம் பதிப்பினுள்ளே மிகச் சிதைந்து காணப்படுகிறது. அது வருமாறு:

'நட்ட பாடை யந்தாளி மலகரி
விபஞ்சி காந்தாரஞ் செருத்தி செவுடி
உதய கிரிபஞ் சுரம்பழம் பஞ்சுரம்
மேக ராகக் குறிஞ்சிகே தாளி
குறிஞ்சி கொள வாணம் பாடை சூர்துங்க ராகம்
நாக மருள்பழந் தக்க ராகம்
திவ்விய வராடி முதிர்ந்த விந்தள
மநுத்திர பஞ்சமந் தமிழ்க்குச் சரியருட்
புரிநா ராயணி நட்ட ராக
மிராமக் கிரிவி யாழக் குறிஞ்சி
பஞ்சமம் தக்கணுதி சாவகக் குறிஞ்சி
யாநந்தை யெனவிவை முப்பத் திரண்டுங்
குறிஞ்சி யாழ்த்திற மாகக் கூறுவர்' (பிங். ௩௯௮)

இதனுள் எட்டா மடியி லுள்ள 'தமிழ்க்' என்னும் பதத்தை

நீக்கி, ஒன்பதா மடி முதலி லுள்ள 'புரி' என்னு மசையை எட்டா மடி ஈற்றிற் பெய்து, 'நாராயணி', 'நட்ட' என்னுஞ் சொற்களுக் கிடையே 'குறிஞ்சி' யென்றொரு சொற் பெய்து, 'பஞ்சமம்' என் பதைச் செந்திறமென மாற்றிப் பாடங்கொண்ட பின்னர். முன்பு செய்தது போல அட்டவணைப்படுத்தி நோக்குவோமாக.

| | அகநிலை | புறநிலை | அருகியல் | பெருகியல் |
|---|---|---|---|---|
| நைவளம் | 37. நட்டபாடை | 38. அந்தாளி | 39. மலகரி | 40. விபஞ்சி |
| காந்தாரம் | 41. காந்தாரம் | 42. செருந்தி | 43. கௌடி | 44. உதயகிரி |
| பஞ்சுரம் | 45. பஞ்சுரம் | 46. பழம் பஞ்சுரம் | 47. மேகராகக் குறிஞ்சி | 48. கேதாளி குறிஞ்சி |
| படுமலை | 49. கௌவாணம் | 50. பாடை | 51. சூர்துங்க ராகம் | 52. நாகம் |
| மருள் | 53. மருள் | 54. பழந்தக்க ராகம் | 55. திவ்விய வராடி | 56. முதிர்ந்த விந்தளம் |
| அயிர்ப்பு | 57. அநுத்திர பஞ்சமம் | 58. குச்சரி | 59. அருட்புரி | 60. நாராயணி |
| அரற்று | 61. குறிஞ்சி | 62. நட்டராகம் | 63. இராமக் கிரி | 64. வியாழக் குறிஞ்சி |
| செந்திறம் | 65. செந்திறம் | 66. தக்கணுதி | 67. சாவகக் குறிஞ்சி | 68. ஆநந்தை. |

அந்தாளிக் குறிஞ்சி யெனத் தேவாரத்துள் வழங்கும் பண் (38) அந்தாளியா, அன்றேல், (48) கேதாளிக் குறிஞ்சியா என ஐயுறற்பாலது.

பஞ்சுரமும் பழம்பஞ்சுரமும் அகநிலையும் புறநிலையுமாகி இருவேறு சாதியாய் நிற்றலின், 'பஞ்சுரம் பழம் பஞ்சுர மாகும்மே' (பிங். சஈகூகூ) யெனப் பிங்கலந்தை நூல் ஒன்றுக்கிக் கூறிய சூத்திரப் பொருள் புலப்பட வில்லை. 'ஆரிய குச்சரி' யென வொன்று மருத யாழ்த் திறத்தினுட் கூறப்படு மாதலின், ஈண்டு, அடையடுக்காது, வாளா, 'குச்சரி' யென்று நிற்பதே பொருத்த மாயிற்று.

தேவாரத்துள் வரும் கொல்லிக் கௌவாணம் ஈண்டுக் கூறிய கௌவாணமா யிருக்கலாம்.

இனி, மருத யாழ்த் திறன் வகை யிவை யென ஆராயப் புகுவாம்.

'நவிர்படு குறிஞ்சி பியந்தையிந் நான்கும்
மருத யாழின் திறனு கும்மே'

என்னுஞ் சேந்தன் திவாகரப் பதிப்பினை நோக்கிப் போலும், சூடாமணி நிகண்டுப் பதிப்பாசிரியரும், 'பெருநவிர் படுகுறிஞ்சி பியந்தையென் றிருந்த நான்கும்' என மூலபாடமும், 'மருத யாழ்த் திறத்தின் பெயர்-நவிர், படு, குறிஞ்சி, பியந்தை' என உரையுங் கொண்டார். மருத யாழ்த் திறத்தினுள்ளே, குறிஞ்சி யென வொன்று புகுவது பொருந்தா தாகலின், 'பெருநவிர் படு குறிஞ்சி' யென்பதை 'பெருநவிர் வடுகு வஞ்சி' எனத் திருத்தி யமைத்துக் கொள்ளுதல் முறையாகும். பியந்தைக்குச் செய்திற மென மற்றுமொரு பெயருண்டென்பது,

'நவிர்வடுகு வஞ்சி செய்திற நான்கும்
மருத யாழ்க்கு வருந்திற னுகும்' (பிங். கநளஅ)

என்னும் பிங்கலந்தைச் சூத்திரத்தா னறியக் கிடக்கின்றது.

'நவிர் தக்கேசி' (பிங். கநகச)

'இந்தளம் வடுகெனல்' (பிங். கநகஎ)

'வஞ்சி பாக்கழி' (பிங். கநகஅ)

என்னும பிங்கலந்தைச் சூத்திரங்களால், நவிர், வடுகு, வஞ்சி யென்பவற்றிற்கு முறையே, தக்கேசி, இந்தளம், பாக்கழி யென்பன பரியாயப் பெயர்களா மென அறிகின்றும்.

'தக்கேசி கொல்லி யாரிய குச்சரி
நாகதொனி சாதாளி யிந்தளந் தமிழ்வேளர்
கொல்லி காந்தாரங் கூர்ந்த பஞ்சமம் பாக்கழி
தத்தள பஞ்சம மாதுங்க ராகம்
கௌசிகஞ் சீகா மரஞ்சாரல் சாங்கிமம்
எனவிவை பதினறு மருதயாழ்த் திறனே' (பிங். கநஅரு)

இரண்டாமடியில், 'சாதாளி யிந்தளம்' என்றிருப்பதை 'யிந்தளஞ் சாதாரி' யென மாற்றுக. ஈற்றய லடியிற் 'கௌசிகம்', 'சீகாமரம்' என்பவற் றிடையே 'பியந்தை' என்னும் மொழியைப் பெய்து கொள்க. ஈற்றடியி லுள்ள 'என விவை' என்பதை நீக்கி, ஈற்றயலடி யிறுதியி லுள்ள 'சாங்கிமம்' என்னும்

மொழியினை நிறுத்திப், பின்னர் அட்டவணைப் படுத்திக் கொள்ளக் கிடைப்பது :

| | அகநிலை | புறநிலை | அருகியல் | பெருகியல் |
|---|---|---|---|---|
| நவிர் | (69) தக்கேசி | (70) கொல்லி | (71) ஆரியகுச்சரி | (72) நாக தொனி |
| வடுகு | (73) இந்தளம் | (74) சாதாளி | (75) தமிழ் வேளர்கொல்லி | (76) காந்தார பஞ்சமம் |
| வஞ்சி | (77) பாக்கழி | (78) தத்தள பஞ்சமம் | (79) மாதுங்க ராகம் | (80) கௌசிகம் |
| செய்திறம் | (81) பியந்தை | (82) சீகாமரம் | (83) சாரல் | (84) சாங்கிமம் |

'செய்திறஞ் சிகண்டி' யெனப் பிங்கலந்தைப் (கஉ௬கூ) பதிப்பினுட் காணப்படுவதனைச், 'செய்திறம் பியந்தை' யெனக் கொள்ளவேண்டு மென்பது இவ் வாராய்ச்சியாற் பெறப்படுகின்றது.

'குறண்டி நோதிறம்' என மற்றொரு சூத்திரம் பிங்கலந்தையுள்ளே இருந்திருக்கவேண்டும்.

இனிச், செவ்வழி யாழ்த் திறம் இவையென ஆராய்வாம்.

'குறண்டி யாரிப வேளர் கொல்லி
தனுக்காஞ்சி யியந்தை யாழ்பதங் காளி
கொண்டைக் கிரிசீவனி யாமை சாளர்
பாணி நாட்டம் தானு முல்லை
சாதாரி பைரவம் காஞ்சி யெனவிவை
பதினாறுஞ் செவ்வழி யாழ்த்திற மென்ப.' (பிங். கூஅச)

எனப் பிங்கலந்தைப் பதிப்பு கூறுகிறது.

'முல்லை சாதாரி பைரவம் காஞ்சி' யென்றாராகலின், முல்லையும், சாதாரியும், ஒரே வகையில், அகநிலையும், புறநிலையுமா மென்பது பெறப்பட்டது.

'யாமை சாளர் பாணிநாட்டம் தானு' என நின்றமையின், 'யாமை' அகநிலை வகையைச் சார்ந்த தென்பது பெறப்பட்டது.

'நேர்திறம் பெயர்திறம் யாமையாழ் சாதாரி
என்றிவை நான்கும் முல்லையாழ்த் திறனே'

எனச் சேந்தன் திவாகரம் கூறும்.

'நேர்திறம் பெயர்திறம் சாதாரி முல்லையென
நாலுஞ் செவ்வழி நல்யாழ்த் திறனே' (பிங். கஙஎக)

எனப் பிங்கலந்தை கூறும்.

'வகுக்குநேர் திறத்தினொடு தருபெயர்த் திறமே
யாமை சாதாரி நான்கு முல்லை'

எனச் சூடாமணி நிகண்டு கூறும்.

புறநீர்மை யாகிய நேர்திறம் பள்ளி யெழுச்சிக் குரிய பாலை யாழ்த் திறப் பண்ணாதலின், எற்பாடு, மாலைக் குரிய செவ்வழி யாழ்த் திற மாகாது ஆதலினால், ஈண்டுக் கூறப்பட்டது 'நோதிறம்' என்றறிக. 'பண்ணோ திறம்' எனப் பரிபாடற் பதிப்பினுட் கண்ட தொடர்மொழியைப் பிரித்தெழுதுங்கால், அது பண் + நோதிறம் எனப் பிரிந்து நிற்பதையும், பண் + நேர்திறம் எனப் பிரிபடாமையும் உற்று நோக்குக. நோதிறம், குறண்டி யென்பன பரியாயப் பெயர்கள்.

இங்ஙனம் ஆராய்வுழி, மேற்காட்டிய பிங்கலந்தைச் சூத்திரம்,

'நோதிறம் பெயர்திறம் யாமை முல்லையென
நாலுஞ் செவ்வழி நல்யாழ்த் திறனே'

என நிற்கும்.

செவ்வழி யாழ் முல்லை யாழ் எனவும் வழங்கும் என்பதும், முல்லை, சாதாரி என்னும் பண் பெயர்கள் தம்முள் வேறுபாடின்றி வழங்கப்படுவனவா மென்பதும், மேற்கண்ட ஆராய்ச்சியினாலே தெளிவாகின்றது.

மேலே திறங் கூறிய சூத்திரத்தினுள், 'யியந்தை', 'காளி' என நிற்பனவற்றை, முறையே, 'வியந்தம்', 'தாளி' என மாற்றிக் கொள்க.

மேற்காட்டிய குறிப்புக்களோ டுடன்பட்டு, அட்டவணைப் படுத்தி நோக்குங்கால், யாம் பெறுகின்ற செவ்வழி யாழ்த்

திறங்களாவன :

| | அகநிலை | புறநிலை | அருகியல் | பெருகியல் |
|---|---|---|---|---|
| நோதிறம் | (85) குறண்டி | (86) ஆரிய வேளர்கொல்லி | (87) தனுக் காஞ்சி | (88) வியந்தம் |
| பெயர்திறம் | (89) யாழ்பதம் | (90) தாளி | (91) தொண் டைக்கிரி | (92) சீவனி |
| யாமை | (93) யாமை | (94) சாளர் பாணி | (95) நாட்டம் | (96) தாணு |
| முல்லை | (97) முல்லை | (98) சாதாரி | (99) பைரவம் | (100) காஞ்சி |

இனிப், பெரும்பண் நான்கும், அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் என்னும் வேறுபாட்டினாலே, பதினாறாகும். அவை தம்மைக் கூறும் பிங்கலந்தைச் சூத்திரம் வருமாறு :

' ஈரிரு பண்ணும் எழுமூன்று திறனு
மாகின் றனவிவை யிவற்றுட் பாலையாழ்
செந்து மண்டலி யாழ்பவுரி மருதயாழ்
தேவ தாளி நிருபதுங்க ராகம்
நாக ராக மிவற்றுட் குறிஞ்சியாழ்
ஆசாரி சாய வேளர் கொல்லி
கின்னராகஞ் செவ்வழி மௌசாளி சீராகம்
சந்தி யிவைபதி னாறும் பெரும்பண் ' (பிங். கதஅ0)

சிலப்பதிகாரத்து, ஊர்காண் காதை, அடியார்க்கு நல்லாருரை யினுள் ஆளப்பட்ட பெயர்களைக் குறித்து நோக்குமிடத்து, இச் சூத்திரத்தின் மூன்றாமடியினை ஐந்தாம் அடி ஆக்கவேண்டுமென் பதும், ' ஆசாரி ' என்பதனை ' ஆகரி ' எனவும், ' கின்னராகம் ' என்பதனைக் ' கின்னரம் ' எனவும், ' மௌசாளி ' என்பதனை ' வேளாவளி ' எனவும், ' பவுரி ' என்பதனை ' அரி ' எனவும், மாற்றுதல் வேண்டு மெனவுங் காண்கின்றோம். இத் திருத்தங்க ளோடு சூத்திரத்தை எழுதப் பெறுவது :

' ஈரிரு பண்ணு மெழுமூன்று திறனு
மாகின் றனவிவை யிவற்றுட் பாலையாழ்
தேவ தாளி நிருபதுங்க ராகம்
நாக ராக மிவற்றுட் குறிஞ்சியாழ்

செந்து மண்டலி யாழரி மருதயாழ்
ஆகரி சாய வேளர் கொல்லி
கின்னரஞ் செவ்வழி வேளாவளி சீராகம்
சந்தி யிவைபதி னாறும் பெரும்பண்'

இதனை அட்டவணைப்படுத்தி நிறுத்தப் பெறுவது:

| அகநிலை | புறநிலை | அருகியல் | பெருகியல் |
|---|---|---|---|
| 1. பாலையாழ் | 2. தேவதாளி | 3. நிருபதுங்க ராகம் | 4. நாகராகம் |
| 5. குறிஞ்சியாழ் | 6. செந்து | 7. மண்டலி யாழ் | 8. அரி |
| 9. மருதயாழ் | 10. ஆகரி | 11. சாயவேளர் கொல்லி | 12. கின்னரம் |
| 13. செவ்வழி யாழ் | 14. வேளாவளி | 15. சீராகம் | 16. சந்தி |

இவ் வதிகாரத்தினுள் கூறியவற்றைத் தொகுத்துக் கூறுமிடத்துப் பெறப்படுவன:

| தொகைப் பெயர் | குறியீட்டெண் |
|---|---|
| நாற்பெரும்பண் | 1, 5, 9, 13. |
| பெரும்பண் வகை (16) | 1 முதல் 16 வரை. |
| இருபத்தொரு திறன் | 17, 21, 25, 29, 33 (பாலை) |
| | 37, 41, 45, 49, 53, 57, 61, 65 (குறிஞ்சி) |
| | 69, 73, 77, 81. (மருதம்) |
| | 85, 89, 93, 97. (செவ்வழி) |
| திறன் வகை (84) | 17 முதல் 100 வரை. |
| பண் (103) | 1 முதல் 100 வரையும், (101) தாரப் பண் டிறம், (102) பையுள் காஞ்சி, (103) படுமலை, என்னும் மூன்று மென்ப. |

நூற்று மூன்று எனத் தொகை பெற்று நின்ற பண்க

ளுள்ளே, தேவாரத்துட் காணப்படுவன :

செவ்வழி(13), தக்க ராகம்(17), நேர்திறம் (புறநீர்மை)(21), பஞ்சமம்(25), காந்தாரம்(33, 41?), நட்டபாடை(37), அந்தாளிக் குறிஞ்சி(38,48?) கொல்லிக் கௌவாணம்(49), பழந்தக்க ராகம்(54), குறிஞ்சி(61), நட்டராகம்(62), வியாழக் குறிஞ்சி(64), செந்திறம் (செந்துருதி)(65), தக்கேசி(69), கொல்லி(70), இந்தளம்(73), காந்தார பஞ்சமம்(76), கௌசிகம்(80), பியந்தை(81), சீகாமரம்(82), சாதாரி(98),

எனு மிவையாம்.

திருவாவடுதுறை யாதீன ஏட்டுப் பிரதி யொன்றிற் காணப் பட்டதாகத் திரு. பொன்னுேதுவா மூர்த்திகள் குறிப்பிட்டன வருமாறு :

பகற் பண்கள் பத்து; இவை ஒவ்வொன்றினுக்கும் முறையே மும்மூன்று நாழிகையாக மேலேற்றிக் கால வரை யறை கொள்க.

பகல்

| கால வரையறை நாழிகை | பண் | இராகம் |
|---|---|---|
| 0— 3 | புறநீர்மை | ஸ்ரீகண்டி |
| 3— 6 | காந்தாரம், பியந்தை | இச்சிச்சி |
| 6— 9 | கௌசிகம் | பயிரவி |
| 9—12 | இந்தளம், திருக்குறுந்தொகை | தெளித பஞ்சமி |
| 12—15 | தக்கேசி | காம்போதி |
| 15—18 | நட்டராகம், சாதாரி | பந்துவராளி |
| 18—21 | நட்டபாடை | நாட்டைக் குறிஞ்சி |
| 21—24 | பழம்பஞ்சுரம் | சங்கராபரணம் |
| 24—27 | காந்தார பஞ்சமம் | கேதார கௌளை |
| 27—30 | பஞ்சமம் | ஆகிரி. |

இராப் பண்கள் எட்டு; ஒவ்வொன்றிற்கும் மூன்றே முக்கால் நாழிகையாக மேலேற்றிக் கால வரையறை கொள்க.

## இரவு

| நாழிகை | பண் | இராகம் |
|---|---|---|
| 30 —33¾ | தக்க ராகம் | கன்னட காம்போதி |
| 33¾—37½ | பழந்தக்க ராகம் | சுத்த சாவேரி |
| 37½—41¼ | சீகாமரம் | நாதநாமக் கிரியை |
| 41¼—45 | கொல்லி, கொல்லிக்கௌவாணம், திருநேரிசை, திருவிருத்தம் | சிந்து கன்னடா |
| 45 —48¾ | வியாழக் குறிஞ்சி | ஸௌராஷ்ட்ரம் |
| 48¾—52½ | மேகராகக் குறிஞ்சி | நீலாம்பரி |
| 52½—56¼ | குறிஞ்சி | மலகரி |
| 56¼—60 | அந்தாளிக் குறிஞ்சி | ஸைல தேசாட்சி |

பொதுப் பண்கள் :

செவ்வழி — எதுகுல காம்போதி
செந்துருத்தி — மத்தியமாவதி
திருத்தாண்டகம் — பியாகடை

திருவாய்மொழிப் பதிப்பினுள்ளே பண்ணும் இராகமும் ஒருங்கே குறிக்கப்பட்டிருக்கின்றன. இவை வருமாறு :

| பண்ணுக்குரிய எண் | பண் | இராகம் |
|---|---|---|
| 1 | பாலையாழ் | தோடி, முகாரி, பந்துவராளி |
| 17 | தக்க ராகம் | பைரவி, சுருட்டி, கல்யாணி, நீலாம்பரி, யமுனா கல்யாணி, ஸௌராஷ்ட்ரம் |
| 21 | புறநீர்மை | எதுகுல காம்போதி, கண்டா |
| 25 | பஞ்சமம் | பிலகரி, முகாரி, சங்கராபரணம் |
| 33, 41 | காந்தாரம் | தந்யாசி, மோஹநம், சாவேரி |

| பண்ணுக்குரிய எண் | பண் | இராகம் |
|---|---|---|
| 37 | நட்டபாடை | தந்யாசி, பியாகடை, கண்டா, ஸ்ரீ ராகம், ஆநந்தபைரவி, அபரூப ராகம் |
| 42 | செருந்தி | கல்யாணி |
| 46 | பழம் பஞ்சுரம் | நாதநாமக்கிரியை, சாரங்கம் |
| 54 | பழந்தக்க ராகம் | ஆநந்தபைரவி. ஸௌராஷ்ட்ரம், காம்போதி, பந்துவராளி, கண்டா |
| 56 | முதிர்ந்த குறிஞ்சி முதிர்ந்த விந்தளம் | நாதநாமக்கிரியை. செஞ்சுருட்டி, ஆநந்தபைரவி, சஹானு, காபி, கமாஸ் |
| 61 | குறிஞ்சி | தோடி, முகாரி, த்வஜாவந்தி |
| 62 | நட்டராகம் | ஆசாவேரி |
| 69 | தக்கேசி | ஆரபி |
| 70 | கொல்லி | மோஹநம் |
| 73 | இந்தளம் | தேசிய ராகம், குண்டக்கிரியை, ஆனந்தபைரவி, ஸௌராஷ்ட்ரம் |
| 80 | கௌசிகம் (கைசிகம்) | செஞ்சுருட்டி |
| 82 | சீகாமரம் | பைரவி, முகாரி, நாதநாமக்கிரியை, சோகவராளி, சாவேரி, கல்யாணி, யதுகுல காம்போதி |
| 88 | வியந்தம் | மத்தியமாவதி |
| 95 | நாட்டம் | முகாரி, யமுனு கல்யாணி, சஹானு, உசேனி, சுருட்டி, அடாணு, கேதார கௌளம். ஸாரங்கம். |

மேலே காட்டிய அட்டவணைகளை நோக்குமிடத்துப், பதின் மூன்று பண்கள் தேவாரத்திற்கும் திருவாய்மொழிக்கும் பொது வாக வுள்ளன வென்பதும், தேவாரத்திற் காணப்படாத ஆறு பண்கள் திருவாய்மொழியில் உள்ளன வென்பதும், திருவாய் மொழியிற் காணப்படாத எட்டுப் பண்கள் தேவாரத்தி லுள்ளன வென்பதும் பெறப்பட்டன. பண்ணுக்கு நேராகக் குறிக்கப் பட்ட இராகப் பெயர்கள் பெரிதும் முரணித் தோன்றுவதை நோக்குமிடத்து, அவை பிற்காலத்தாரால் வரையறை யின்றிக் குறிக்கப்பட்டன வென்பதும் பெறப்பட்டது.

# காட்சி யளவை

திரு. த. இராமநாத பிள்ளை, பி.ஏ. (இலண்டன்), சுன்னுகம், இலங்கை.

(முற்றொடர்ச்சி: துணர் ௰சு, மலர் அ, பக்கம் 322.)

## 7. இரண்டாம் உதாரணம்.

சுவான் (Schwan) என்னும் சர்மானியர் ஒருவரின் ஆராய்ச்சி ஒப்பு முறையின் நலத்தை நன்கு புலப்படுத்துகின்றது. கி.பி. 1838ஆம் ஆண்டு இவ் வாராய்ச்சி செய்யப்பட்டது. மாவைப் புளிக்கச் செய்து, உணவுப் பண்டங்களை ஆக்குகிறோம். இயற்கை விதி யொன்றுக்கு அமைந்தே மாப் புளிக்கிறது. சீனி புளித்து மதுவாகவும் கரிவாயுவாகவும் பரிணமிக்கின்றது. சீனி புளிப்பதற்குக் காரணம் பயிரணுக்கள் (Yeast cells) எனத் துணிந்தனர். அவ் வுண்மையை ஒப்பு முறையால் ஆராய்ச்சி செய்தார். கள், அரிசி, கோதுமை முதலிய பண்டங்கள் சர்க்கரைப் பதார்த்த முடைய வாகையால், புளிக்குந் தன்மை யுடையன. பயிரணுக்களே காரண மென்பது ஒரு துணி பொழிய, முற்றுன தன்று. லீபிக் (Leibig) என்பவர், பயிரணுக்களினின்று உற்பத்தியாகு மொரு பதார்த்தமே புளிக்கச் செய்கின்றதெனப் பிறிதொரு காரணத்தை மொழிந்தனர். இவ் விரு துணிபுகளும் ஒப்பு முறைமையின் துணிபுகளே. இவ் விரு காரணங்களுள், எது காரண மென ஒருதலைப்படுதற்கு வேறு முறைகள் வேண்டப் படும். ஒப்பு முறையால் ஒரு துணிபைப் பெறலா மொழிய, ஒன்றின் காரணத்தைக் கருத வியலாது.

## 8. தனிவேற்றுமை முறை.

ஆராயுங் காரணம் நிகழுமாயின், அத் தோற்றம் உடன்பாட்டுக் காட்சி எனப்படும். காரணத்தை யுணர்த்தும் நிகழ்ச்சி ஒரு தோற்றத்தில் நிகழாதாயின், அத் தோற்றம் எதிர்மறைக் காட்சி யெனப்படும். அபாபக் காட்சி எனினும், எதிர்மறைக்

காட்சி யெனினும் பொருந்தும். ஒப்பு முறையால் காரண காரியத் தொடர்பை உணர்த்தும் தோற்றங்களின் உடன்பாட்டுக் காட்சிகளே ஆராயப்படும். ஒப்பு முறையின் துணிபை எதிர் மறையாக ஆராய்ந்து நிச்சயிக்கும் முறை தனி வேற்றுமை முறை. இரு காரணங்கள் துணியப்படின், அவற்றுள் எது காரணமெனத் துணிதற்குத் தனி வேற்றுமை முறை கருவியாகும். பரிசோதனை தனி வேற்றுமை முறையின் இன்றியமையாத இலட்சண மாகும். பரிசோதனைகளிலே மாத்திரம் தனி வேற்றுமை முறை உபயோகப்படும். தனியொப்பு முறையால் பெறப்பட்ட துணிபைப் பரிசோதனையால் வலியுறுத்துகிறோம். தனிவேற்றுமை முறையால், எண்ணல் முறை, தனியொப்பு முறை முதலியவற்றின் துணிபை வலியுறுத்தலா மொழிய, ஒரு புதிய துணிபை நிலைநாட்ட வியலாது. இயற்கையாராய்ச்சிகளில் பரிசோதனை மிகவும் உபயோகப்படுகிறதால், தனியொப்பு முறை ஆளப்படும். பரிசோதனை செய்யும்போது துணிந்த ஒரு தோற்றத்தை, அதன் காரண சந்தர்ப்பத்தோடு நிகழும்படி ஒழுங்கு செய்து, காரணத்தைத் தெளிகிறோம்.

### தனி வேற்றுமை முறையின் இலக்கணம்

'துணியப்பட்ட காரணம் நிகழ்ந்துழி ஒரு காரியம் நிகழ்ந்தும், நிகழாதுழி நிகழாதும் நிற்கக் காரண சந்தர்ப்பம் ஒரே தன்மையாக இருப்பின், அக் காரணமே காரண மென வலியுறுத்தப்படும்.' காரண மெனத்துணியும் முன்னிகழ்ச்சி நிகழுமாயின், அத்தோற்றம் உடன்பாட்டுக் காட்சி. முன்னிகழ்ச்சி நிகழாதுழிப், பின்னிகழ்ச்சி நிகழாதாயின், அத்தோற்றம் எதிர்மறைக் காட்சி யாகும். தனிவேற்றுமை முறையால் ஒரேயொரு எதிர் மறைக் காட்சியை ஆராய்ந்து, துணிபை வலியுறுத்துகிறோம். பரிசோதனையாலேயே எதிர்மறைக் காட்சியை ஆராய்கிறோம். தனிவேற்றுமை முறையின் நலத்தைக் காட்டுதற்கு இரு பரிசோதனைகளை உரைப்பாம்.

### முதலாம் பரிசோதனை.

ஒரு இருப்புத் துண்டையேனும் ஒரு நாணயத்தையேனும் நிலத்தில் விழ விடும்போது, அது விரைவாக விழுகின்றது.

பறவை ஒன்றின் சிறிய இறகை விழ விடும்போது சொற்ப காலத்துக்குப் பின்னரே விழுகின்றது. பூமியின் கவர்ச்சி விதிப் படி, இரண்டும் ஒருங்கு விழுதல் வேண்டும். இவ் விதி வழு விற்குக் காரணம் காற்று. உடன்பாட்டுக் கட்சியைக் காட்டி னும். இனிப், பரிசோதனையால் எதிர்மறைக் காட்சியை ஆராய் வாம். ஒரு பளிங்குப் பாத்திரத்தின் விளிம்பில் ஒரு நாணயத் தையும், ஒரு இறகையும் நூலினுல் தூக்கி, அப் பாத்திரத்தை அடைத்துக், காற்றைத் துருத்தியினுல் வெளியே போக்கிய பின், நாணயத்தையும் இறகையும் ஒருங்கு விழ விடுக. இரண்டும் பாத்திரத்தின் கீழ்த் தட்டில் ஒருங்கு வீழ்தலைக் கவனிக்கக், காற்றே இறகை விழவிடாது தடைசெய்தது என்பது வெளிப்படை யாகும். ஒரு தனிப் பரிசோதனையால் காற்றே கவர்ச்சியைத் தடைசெய்து, இறகை நிலத்திலே விழாமல் தடுக் கின்றது என அறிந்தோம்.

## 10. இரண்டாம் பரிசோதனை.

வான வில்லின் தோற்றத்தை முன்னர் ஆராய்ந்தாம். அவ் வாராய்ச்சியைத் தொடர்வாம். தனியொப்பு முறையால் ஆய்ந்து, பளிங்கு ஒரு காரணமாதல் கூடுமென்றும், நீர்த் துளிகள் காரண மாதல் கூடுமென்றும் மயங்கினேம். பௌதிக நூலோர், பளிங் கின் வடிவமே ஒளியைப் பல நிறக் கதிர்களாகப் பிரிக்கின்ற தெனக் காட்டுகின்றனர். ஞாயிற்றினின்று ஒளி கற்றை கற்றை யாகப் பூமியின் நிலப்பரப்பில் வீழ்கின்றது. கதிர்க்கற்றை ஒரு துவார மூலமாக ஓர் மாடத்துள் வந்துழி, வட்டமான நிழலைத் தருதலைக் காணலாம். இக் கதிர்க் கற்றையை முப்படைப் பளிங்கில் ( Prism ) வீழ்த்துவாம். ஒளி முப்படைப் பளிங்கை ஊடுருவிச் செல்லும்போது, எழுவகை நிறத்த கதி ராகப் பிரிகின்றது. இங்ஙனம், உடன்பாட்டுக் காட்சியால் பளிங்கின் முனையான கோணமே காரணமெனத் துணியப்பட் டது. துணியப்பட்ட இக் காரணத்தைக் காரண மென ஒரு பரி சோதனையால் வலியுறுத்துவாம். முப்படைப் பளிங்குகள் இரண்டை எடுத்து, ஒன்றன்மேல் ஒன்றைப் பொருந்த வைத் தால், நாற்படைப் பளிங்கொன்று கிடைக்கும். நாற் கோணப்

பளிங்குகளுக்கு ஊடாக ஒளி செல்லும்போது, வான வில்லின் நிறங்கள் தோற்றவில்லை. வெண்மை நிறமாகவே ஒளி சென்றது. வெண்மை நிறக் கதிர், உண்மையில், ஒரு கலப்புக் கதிர். அது, மஞ்சள், சிவப்பு முதலிய கதிர்களாகப் பிரிகின்றது. உருண்டை வட்டமான பளிங்கும் கதிரை எழுவகை யாக்கும் தன்மை யுடையது.

## 11. தனிவேற்றுமை முறையின் நலம்.

தனியொப்பு முறை, இரு காரணங்களில் ஒன்றைத் துணி தற்கு, இன்றியமையாத முறையாகும். தனிவேற்றுமை முறை யால் எதிர்மறைக் காட்சியைப் பரிசோதனை செய்தல், ஒரு துணிபை நாட்டுதற்கு, அவசியமாகும். பரிசோதனை செய்ய வியலாத பொருட்களை இம் முறையால் ஆராய வியலாது. வெண்காயம் விளைவதற்கு எவ்வகை மட்கண்டம் நல்லதென ஆராய்வாம். பரிசோதனை செய்ய வியலாது. பலவகை மட் கண்டத்தையும் ஆராயவேண்டும். ஒருவகை மட்கண்டம் நல்ல தெனத் துணிந்தாலும், அதை நல்ல நிலமென வற்புறுத்த வியலாது. கோடையில் அந்நிலத்தில் நல்ல விளைவு ஆகிலும், மாரியிலும் அவ் விளைவு உண்டாகுமெனச் சொல்ல வியலாது. சில மட்கண்டம் களியாகவும், சில உவராகவும், சில மணலாகவும், சில முருகையாகவும் இருப்பதால், எது நல்லதென்று நிச்சய மாகச் சொல்லமுடியாது. ஒருநிலத்திற்கு ஒரு எரு முதலிய பயனை நல்லதாக இருக்கும். வேறோர் நிலத்திற்கு வேறோர் எரு பயனை நல்லதாக விருக்கும். இனி, ஒரு நிலத்தில், கோடையில், ஒரு வித பயனை நல்லதாகவும், மாரியில் அது பயனற்றதாகவும் இருத்தல் கூடும். இவற்றினை யெல்லாம் தனிவேற்றுமை முறையால் பரி சோதனை செய்ய வியலாது. தனியொப்பு முறை ஒரு துணிபை ஆராயுமொழிய, ஒரு துணிபை ஆக்கும் வல்லமை யில்லாதது.

### முக்கிய பரிசோதனை.

தனி வேற்றுமை முறையால் ஆராய்ந்துழி, ஒரு தோற்றத் தின் காரணமாக, இரு துணிபுகள் கூறப்படுமாயின், அவற்றுள் எது உண்மை யென ஒருதலைப் படுதற்கு, ஒரு முக்கிய பரி சோதனை செய்ய வேண்டும். அப் பரிசோதனையால் எது காரண

மென நிச்சயமாகத் துணியலாம். பரிசோதனைக் காட்சியொன்றை, ஏனைய காட்சிகளிலும், முக்கியமான தென அறிந்த பின்னரே, அப் பரிசோதனையைச் செய்யவேண்டும். ஈண்டு ஒரு உதாரணம் கூறுதும். வேற்றுமை ஒப்புக்கூட்டு முறையை விளக்கும். உதாரணம் ஒரு முக்கிய பரிசோதனை யுடையதாய் இருக்கும். ......................ஞாயிற்றினின்று ஒளி பூமிக்குச் செல்லு முறையை ஆராய்ந்தோர், இரு கொள்கைகளை மொழிந்தனர். ஒரு சாரார் ஒளிக்கதிர், அணு அணுவாய் விழுந்து பிரகாசிக்கின்றது என்பர். இக் கொள்கை பூதவணுக் கொள்கை எனப்படும். ஒரு சாரார், ஒளி ஆகாச தன்மாத்திரையின் பற்றுக்கோடாய், அலை அலையாய் வருகின்றது என்பர். பூதவணுக் கொள்கை உண்மையாகின், ஒளி, வாயு மண்டத்திலும் பார்க்க, நீரில் வேகமாய்ச் செல்லும். (ஒளி, மென்மையான மண்டலத்திலிருந்து வன்மையான மண்டலத்திற்கு மாறும்போது, அதன் வேகம் மிகுமென்பர் பௌதிக நூலோர்.) வாயு மண்டலம் நீர் மண்டலத்திலும் மென்மையானது. (மென்மை = Lighter medium; வன்மை = Denser medium).

அலைக் கொள்கை உண்மையாகில், ஒளியின் வேகம், நீரிலும் பார்க்க, வாயு மண்டலத்தில் விரைவாகுமென்பர். ஒளியின் வேகத்தை நிச்சயித்தால், எந்தக் கொள்கை உண்மையானதெனச் சொல்லலாம். நுண்ணியதாகிய யந்திரத்தால், ஒளிக்கதிர் நீரிலும் பார்க்க, வாயுவில் வேகமாகச் செல்லுகின்றதெனத் துணியப்பட்டது. இவ்வாறு, அலைக்கொள்கை சரியெனத் துணியப்பட்டது. அலைக்கொள்கை சில இயற்கை விதிகளோடு முரணுகின்றதாகையால், பின்னரும் ஆராயப்பட்டது. பரமாணுக் கொள்கை ஒன்று காட்டப்படுகிறது. அக் கொள்கையினர், ஒளி வீசும் பரமாணுக்கள் குறுகிய கதிர் கதிராய் அலையலையாகச் செல்கின்றன என்பர்.

### ஒப்பு வேற்றுமைக் கூட்டுமுறை.

ஒரு காரண காரியத் தொடர்பை நீக்கமின்றி நிற்குந் தொடர்பாகக் காணவேண்டும். காரண காரியத் தொடர்பை

நாட்டுதற்குத், தனியொப்பு முறையாலும் தனி வேற்றுமை முறையாலும் ஆராயவேண்டும். பல காட்சிகளை ஆராய்ந்து, எகரம் தோற்றும்போதெல்லாம் விகரம் என்றாற்போல, ஒரு துணிபை மொழியவேண்டும். பின்னர், எகரம் தோற்றாத ஒரு காட்சியில் விகரம் தோற்றவில்லை எனக்காட்டவேண்டும். இனி, இவ் விரு முறையையும் அடக்கியுள்ள ஒப்பு வேற்றுமைக் கூட்டு முறையால், யாண்டு எகரம், ஆண்டு விகரம் என்றும், யாண்டு எகரமின்று, ஆண்டு விகரமின்று என்றும் காட்டவேண்டும். இக் கூட்டு முறையினும் வலியுடைய முறை வேறொன் றில்லை. ஒப்பு வேற்றுமைக் கூட்டு முறையின் இலக்கணம் வருமாறு :—

'யாதொரு தோற்றம், தனியொப்பு முறையால், பிறிதோர் தோற்றத்தின் காரண மெனத் துணியப்பட்டு, அக் காரண மாகிய தோற்ற மின்றிக், காரிய மாகுந் தோற்றமும் நிகழா தெனத் தனி வேற்றுமை முறையால் வற்புறுத்தப்படுமாயின், முந்திய தோற்றம் பிந்தியதின் காரண மெனப்படும்.' இம் முறையாலே, பொருள் நூலாரும், பௌதிக நூலாரும் தம் பிரமாணங்களை ஆராய்ந்து, நிச்சயித்தனர். ஆராய்ச்சி முறை களில் சிறந்த முறை இம் முறையே.

## உதாரணம்.

பயிரணுக்களே மது புளித்தற்குக் காரணமென்னும் ஆராய்ச்சியைத் தொடர்வாம். முக்கிய காட்சி யொன்றால், இரு கொள்கைகளுள் ஒன்றைக் களைந்து, ஒன்றைத் துணிவேம். பயிரணுக்களே காரணம் என்பது முதலாம் கொள்கை. பயி ரணுக்களிலிருந்து பெருசியும் பதார்த்த மொன்றே காரண மென்பது இரண்டாம் கொள்கை. எதிர்மறைக் காட்சிகள் பல ஆராயப்பட்டன. வாயு நீங்கிய குழல் ஒன்றில் சுத்த திராட் சைப் பழத்தை வைத்துப், பரிசோதனை செய்தபோது, திராட் சம் மதுவாகப் பரிணமிக்க வில்லை. ஆனால், வாயுவோடு கலந்த திராட்சம் மதுவாயிற்று. காற்றில் சஞ்சரிக்கும் பயிரணுக்களே சீனியை மது வாக்குந் தன்மை யுடையன என்றார் கே லுசாக் (Gay Lussac). வாயுவுடன் கலந்த திராட்சம், சில சமயங்களில்,

மதுவாகாமல் இருந்தது. அச் சமயங்களில் காற்றில் பயிரணுக்கள் இல்லையென நிச்சயிக்கப்பட்டது. காய்ச்சிய் குழலூடாகச் செலுத்திய வாயு திராட்சத்தை மதுவாக்குந் தன்மை யில்லாதிருந்தது. பயிரணுக்கள் சூட்டினால் இறந்தன. 20°C பாகை தொடக்கம். 24°C பாகை சூடுள்ள வாயு மதுவாக்குந் தன்மை உளதாயிருக்கிறது. 60°C. பாகைக்கு மேலும், 0°C பாகைக்குக் கீழும் சூடான வாயுவுக்கு மதுவாக்குந் தன்மையின்று. ஹெம்ஹோல்ஸ் (Helmholtz) என்பவர், பிராண வாயுவே மதுவாக்குந் தன்மை யுளதென ஆசங்கித்தனர். அது தவறென்பது வெளிப்படையாகும். ஹோவ்மன் (Hoffman) என்பவர் பருத்திப் பஞ்சுக்கு ஊடாகச் செலுத்திய வாயுவுக்கு மதுவாக்குந் தன்மையில்லையென்று காட்டினார். இவ் வுண்மையை நன்குணர்ந்து, பயிரணுக்களோ, அணுக்களின் பதார்த்தமோ காரணமென ஹெம்ஹோல்ஸ் ஆராயத் தொடங்கினார். இது ஒரு முக்கிய பரிசோதனையாகும். மது நிறைந்த ஒரு சாடிக்குள் திராட்சை ரசம் அடைக்கப் பெற்ற ஒரு 'இரப்பர்க்' குழலை அமிழ்த்தினர். திராட்சம் புளிக்கவில்லை. மதுவி லுள்ள பயிரணுக்கள் 'இரப்பரு'க்கு ஊடாகச் செல்லாமையால், திராட்சம் புளிக்க வில்லை. பயிரணுக்களின் பதார்த்தமே காரணமெனில், அது கரைந்து, உட்சென்று, புளிக்கச் செய்யு மென நினைத்தனர். பின்னர், பாஸ்ரூர் (Pasteur) என்பவர், பல பரிசோதனைகள் செய்து, இக் கொள்கையை வலியுறுத்தினர். இச் சிறு நிகழ்ச்சியின் காரணத்தைத் துணிதற்குப், பலகாலம், பலர் ஆராய்ந்தனர்.

## இருமடி யோப்பு முறை.

மூன்றும் முறைக்கு மில் ஒப்பு வேற்றுமைக் கூட்டு முறையெனப் பெயரிட்டனர். முந்திய பந்தியில் கூறிய ஒப்பு வேற்றுமைக் கூட்டுமுறை, மில் கூறிய ஒப்பு வேற்றுமைக் கூட்டுமுறையினின்று வேறென மெலோன் (Mellone) தம் மதம் நாட்டுகின்றனர். மில்லின் மூன்றும் முறையை இருமடி யொப்பு முறை என அழைத்தலே தகுதி யென மெலோன் செப்புகின்றனர். ஒப்பு வேற்றுமைக் கூட்டு முறைக்கும் இருமடி யொப்பு

57

முறைக்குமுள்ள வேற்றுமை வருமாறு: ஒப்பு வேற்றுமைக் கூட்டுமுறை காண்டலையும் பரிசோதனையையும் உபயோகிக்கின்றது. இருமடி யொப்பு முறை காண்டலை மாத்திரம் உபயோகிக்கின்றது. இரண்டும் உடன் பாட்டுக் காட்சிகளையும் எதிர்மறைக் காட்சிகளையும ஆராய்கின்றன. ஒப்பு வேற்றுமைக் கூட்டுமுறை எதிர்மறைக் காட்சிகளைப் பரிசோதனையால் ஆராய்கின்றது. இருமடி யொப்பு முறை எதிர்மறைக் காட்சிகளையும் காண்டலால் மாத்திரம் ஆராய்கின்றது.

## இருமடி யொப்பு முறையின் இலக்கணம்.

'யாது, ஒரு தோற்றம் நிகழ்ந்துழி நிகழ்ந்தும், நிகழாதுழி நிகழாதும் இருக்குமாயின், அது அத் தோற்றத்தின் காரணமெனப்படும்'.

## 16. உதாரணம்.

தார்வினது (Darwin) ஆராய்ச்சி ஒன்று வருமாறு: கி. பி. 1835ஆம் ஆண்டு, இளவேனிற் காலத்தில், புல் செழிப்பாக வளராத ஒரு சதுப்பு நிலத்தில் செம்மண் பரப்பிவிட்டனர். இரண்டரை வருடத்தில் ஆராய்ந்தபோது, செம்மண் முக்கால் அங்குலம் தாழ்ந்திருப்பதைக் கண்டனர். மேற்பரப்பில் வேறு மண் உண்டாகி யிருந்தது. ஏழு வருடத்தின் பின் தோண்டிய போது,செம்மண் இரண்டு அங்குலம் தாழ்ந்திருந்தது. ஆதியில் சேற்று நிலத்தில் மேற் பரப்பி லுள்ள நிலக்கரி மண் செம்மண் படைக்குக் கீழ் இருந்தது. சதுப்பு நிலத்தின் மேற்படை புதியதோர் மண்ணாக விருந்தது. அது பயிர்மண் (vegetable mould). அப் பயிர்மண் உண்டாகிய பின், புல் செழிப்பாக வளர்ந்தது. இப் பயிர்மண் உண்டாகுதற்குக் காரண மென்ன வென ஆலோசித்தனர். முதல் உடன்பாட்டுக் காட்சிகளைத் தேடித் திரிந்தனர். தென் னிங்கிலாந்து தேசத்து ஒரு குறிச்சியி லுள்ள சுண்ணும்புக் கற்பாறைகளைத் தேடிப்பார்த்தனர். சிற்சில இடங்களில், சுண்ணும்பு(chalk)மழையினுல் கழுவப்பட்டு, மேற்பரப்பில் பெருங்கல்லுகளும் சிவத்தக் களிமண்ணும் இருந்தன. இப் படைமேல்; புல் வளர்ந்த இடங்களில், பயிர்மண் இருந்தது.

வேறோர் இடத்தில் ஒரு வயலில் சுண்ணும்பு மண்ணைத் தூவிப் பரப்பினர். அம்மண் முப்பது வருடத்தில் ஏழு அங்குலம் தாழ்ந்தது. பயிர் மண் அதன்மேல் உண்டாகியிருந்தது. பயிர் மண் உண்டாகுதற்குக் காரணம் நாங்கூழ் (earthworms) எனத் துணிந்தனர். நாங்கூழ், நாகப்பூச்சி, நாக்குளிப் புழு என்பன ஒரு நிலப் புழுவின் பெயர்.

இனி, எதிர்மறைக் காட்சிகளை ஆராய்ந்தனர். பெருங் கற்களின் கீழ், நிலம் வறட்சியாக இருப்பதால், நாங்கூழ் பெருகாது. ஒரு கல் முப்பத்தைந்து வருடமாக இரண்டங்குலம் தாழ்ந்தது. கல்லின்கீழ், 15 அங்குல ஆழத்தில், இரண்டு மூன்று புழுக்கள்தான் இருந்தன. எறும்புகள் குடியாக விருந்தனவாகையால், புழுக்கள் குறைந்தன போலும். வேறோர் இடத்தில் இடப்பட்ட கற்கள், மண்ணால் மூடப்படாமல், புல்லும் வளராமல் இருந்தன. இவ்வாறு, நாங்கூழ் இல்லாத இடங்களில், பயிர்மண் இல்லாமல், புல் வளரவில்லை. நாங்கூழ்ப் புழுவே பயிர் மண்ணை உண்டாக்குகிறதென்பது ஒருதலை.

(தொடரும்.)

# கலிங்கப் போரும், காலிங்க வீரரும்.

திரு. ஈ. ஆர். நரசிம்ம ஐயங்கார், பி.ஏ., பி.எல்.,
வழக்கறிஞர், சேலம்.

(முற்றொடர்ச்சி: துணர் ௰௬, மலர் ௪, பக்கம் 150)

இனி, ஆராய்ச்சிப் புலமையில் திகழும் திரு. மு. இராகவ ஐயங்கா ரவர்கள் மேற் கூறிய வாசிரியர் கருத்தை யேற்பதற் கொண்ணு தெனப் பல தடைகளை எடுத்துக் கூறியுள்ளார். இதனைச் சிறிது நோக்குவாம்.

குலசேகரன் என்னும் பெயர் குலோத்துங்கனுக்கு வழங்கப் பட வில்லை என்பது முதற் றடை யாகும். பரணியில், இப் பெயர் குலோத்துங்கனுக்கு இடப்பட்டிருப்பது கவிக் கூற்றாகக் கொள்ளவேண்டுமென்றும், சாசனச் சான்று வேண்டுமென்றும் உரைப்பா ராயினர். குலசேகரன், மகேந்திரன், விக்கிரமன் என்பன குலோத்துங்கனுடைய பட்டங்களாக இடர்க் கரம்பைச் சாசனத்தில் காணப்படுகின்றன. எனவே, குலோத் துங்கனுக்குக் குலசேகரன் என்னும் பட்டம் சாசனத்திற் காணப்பட வில்லை யென்பது வலியற்ற தாகும். இக் கருத் துரைக்கப்பட்ட காலை, இச் சாசனம் வெளிப்போந் துலவ வில்லை போலும்.

அருளாகரன் என்னும் பெயர் கருணாகரன் என்பதன் பரியாயப்பெய ராகா தென்பது மற்றொன்று. இப் பெயர்களைப் பல்லவர்கள் குலப் பெயராகக் கொண்டிருந்தனர் என்னலாம். பதினான்காம் நூற்றாண்டில் திகழ்ந்த திருவேங்கட முடையான் என்னும் காளிங்கராயன் பெருங் கருணையாளன் எனப்படு கின்றான் (42 of 1900). காஞ்சிப் பதியில் கோயில் கொண் டருளியுள்ள அருளாளப் பெருமானைப் பல்லவர்கள் குல தெய்வ மாகக் கொண்டிருந்தன ரெனவும், அதனான் அருளாகரன் என்னும் பெயரிட்டுக் கொண்டன ரெனவும் கூறலாம். கருணா

கரன் என்பது அருளாகரன் என்பதன் பரியாய மாகுமென்னலாம். மணவிற் கூத்தன் அருளாகரன் என்பதனையும், திருவரங்கன் கருணாகரன் என்பதனையும் தமக்குரிய பெயர்களாகக் கொண்டனர் என்பது அறியத் தக்கது.

அரும்பர்க் கிழான் என்பது வேளாளருக்கே யுரிய பெயராகு மெனவும், அது பல்லவருக் குரிய தன்றெனவும் கூறி, மணவிற் கூத்தன் உதித்த குலம் பல்லவர் குல மாகா தென்பர். ஆயினும், ஐயங்கா ரவர்கள், தாம் காட்டிய சாசனத்தில், கருணாகரனின் தேவியே தன் நாயகனை 'வேளான் கருணாகர ரான' என்று உரைத்திருப்பதை மறந்து, இத்தடையெழுப்பியுள்ளார். எனவே, இப் பெயர் பல்லவருக் குரிய தென்பது உண்மையாகும்.

இனிக், கருணாகரன் வண்டுவ ராச னென்றும், வண்டையர ரச னென்றும் பரணியிற் கூறப்படுகின்றான். இவன் தேவியின் சாசனத்தில், இவன் சோழ நாட்டு வண்டாழஞ் சேரிக் குடையவனாக் கூறப்படுகின்றான். சிலர் தொண்டை நாட்டு வண்டலூருக் குடையவன் என்பர். இவனாட்சிக் குட்பட் டிருந்த வூர் இணைய தென்பதனை அறிய முயலுவாம்.

கார் மண்டல சதகத்தில், 'தொண்டையர் காமனெனும், வண்டையன் நந்தி யெம்மான் வரை' என்னும் அடிகளில், பல்லவர் குல முதல்வன் வண்டையன் எனப் படுகின்றான். இதனான், பல்லவர் வண்டுவன், வண்டையன் எனப் படுவாராயினர் என்னலாம். மற்றும், பல்லவர்கள் வாழ்ந்த ஊர்களும் இச்சொற்பட வழங்கலாயின வெனவும் கூற வமையும். சோழ நாட்டு வண்டாழஞ்சேரியும், தொண்டை நாட்டு மாவண்டூரும், வண்டலூரும் பல்லவர் வதிந்த ஊர்க ளாகும். கருணாகரனும், அவன் முன்னோனும் வண்டாழஞ்சேரிக் குடையவ ராகச் சாசனங் கூறுமெனின், அது அரும்பர்க் கிழான், ஐயாறுடையான், கருப்பூருடையான் என்பன போல, அவ் வூரில் வதிந்தோர் குலத்து வந்தவன், அல்லது, அவ்வூரிற் பிறந்தவன் என்னும் பொருள்படும். எனவே, கருணாகரன் ஆட்சிக் குரிய வூர் சோழ

நாட்டோரே யாதல்வேண்டு மென்னும் நியதி பெறப்படாது. தொண்டை நாட்டு வண்டலூரும் அவனாட்சி புரிந்த வூராகவும் கருதலாகும். மற்றும், அரசர்களின் கருத்துப்படி, படைத் தலைவர்கள், தமது காலத்தில், பலவூர்களி லிருந்து ஆட்சி புரிந்ததோர் வழக்கும் சாசனங்களால் அறியலாகும். மணவிற் கூத்தனுக்கும் கருணாகரனுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததாகல் வேண்டுமென்பது காலிங்கன் என்னும் சிறப்பு வாலாற்றாற் றெரியப்படுகின்றமையின், கருணாகரன் செம்மற்பட்டு சில்லாவி லுள்ள வண்டலூரி லிருந்து ஆட்சி புரிந்தான் என்பது பொருந்தும். கருணாகரன், கலிங்கப் போருக்குப் பின்னர், ஓய்வு வேண்டி, தன் னிறுதிக் காலத்தை இனிது கழித்தான் என்னலாம். இதனான், அவன் பெயர் சாசனங்களிற் காணப்படவில்லை எனக் கொள்ள வமையும். மந்திரிப் பதவியை மணவிற் கூத்தனுக் காக்கினன் போலும். கருணாகரன் நல்ல வைணவனாகவும், மணவிற் கூத்தன் நற் சைவனாகவும் வாழ்ந்து, இருவரும் உழுவலன்பு காட்டி ஒழுகி வந்தனர் என்பது பொருந்து மாற்றை யறிக.

இனி, இக் காலிங்கன் வரலாறு 12ஆம் நூற்றாண்டில் திகழ்ந்த கூத்தர்களின் வரலாறு அறிவதற்குச் சிறந்த கருவியாவதைக் காட்டுவாம்.

காலிங்கன் கூத்தன் என்னும் இயற்பெயருடையவனாவன். இவன் மணவிற் கூத்தன் எனவும், வழங்கப்பட்டான். இவன், தில்லையில் பல பணிகளை யியற்றிய காரணத்தான், பொன்னம்பலக் கூத்தன் என்னும் நாமம் பெறலானான் என்னலாம். காலிங்கன் என்பதைப் போலவே, பொன்னம்பலக் கூத்தன் என்பதும் இவனுக்கே யுரிய தாகும் மற்றொரு சிறப்பாகும்.

அலங்கார நூலாசிரியரான தண்டியின் தந்தை அம்பிகாபதிக்கு, 'ஆடகமன்றில் நாடகநவிற்றும்' என்று ஓர் சிறப்புத், தண்டி யலங்கார நூலின் பாயிரத்திற், கூறப்படுகின்றது. இச் சிறப்புப் பொன்னம்பலக் கூத்தன் என்பதன் பரியாயமாகும். பொன்னம்பலக் கூத்தன் என்பது காலிங்கனுக்கே உரியதென் பதனைக் காட்டினா மாகலின், அம்பிகாபதி காலிங்கன் வழிவந்தவ

ணுவன் என்னக் கருதலாகும். காலிங்கன் வடமொழிப் புலமை யுடையவனாய் விளங்கின னாகலின், அவன் வழி வந்தோரும் அத் தகை புலமைக் குரிய ராவர் எனக் கூறலாகும். இவ் வம்பிகாபதி காலிங்கனின் பெயரனுவன் என்னலாம். இவர் காலிங்கனினும் அறிவு வாய்ந்தவ ராவர். வடமொழி, தென்மொழி யாகிய இரு மொழியினும் வல்லுநராய் இருந்தாரென்று அப் பாயிரம் கூறு நிற்கும். இவரைப் போல இவர் புதல்வன் தண்டியும், வட மொழித் தண்டி நூலைத் தழுவித், தமிழலங்கார நூல் இயற்றி யுள்ளார். இத்தகைய வரலாற்றான், தக்கயாகப் பரணியை இயற்றிய கூத்தன் பொன்னம்பலக் கூத்தனாகிய அம்பிகா பதியே யாவன் என்னலாம். இவ் வம்பிகாபதியும், அவர் புதல்வன் தண்டியும், இரண்டாங் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் காலத்தில் திகழ்ந்தவ ராவர். தக்கயாகப் பரணி யும் 2ஆம் இராசராசனைச் சிறப்பிக்க வெழுந்த நூலாகும். காலிங்கன், குலோத்துங்கன், விக்கிரமன் ஆகிய இருவர் காலத் திலும் வாழ்ந்தவனுவன். இதனான் அவன் நீண்ட நாள் வாழ்ந் தவன் என்பது தெளிவாம். அம்பிகாபதி காலிங்கனின் பெய ரனாகி, அவன் பெயராகிய பொன்னம்பலக் கூத்தன் என்பதனை யும் உடையவனாயினன் என்னலாம். தண்டி யலங்கார மேற் கோட் செய்யுளில் வரும் 'கூத்தன் வாக்கு' என்றது இவ் வம்பிகாபதி யாகிய கூத்தனைச் சுட்டு மென்னலாம்.

இனி, இக் காலத்தில் ஒட்டக்கூத்த ரென்று மற்றொருவர் இருந்தமையாலும், அவருக்குக் கவிச் சக்கரவர்த்தியென்னும் பட்டம் வழங்கினமையாலும், தக்கயாகப் பரணியை ஒட்டக் கூத்தர் இயற்றியதென்று இருப்பதையும் காட்டலாகும். இது பொருந்தா தென்பதற்குப் பல காரணங்கள் இருப்பதைக் காட்டுவாம்.

தக்கயாகப் பரணி யுரையால், அந் நூலாசிரியர் சைவாகமங் களையும், வேதத்தினையும், புராணங்களையும் துருவி யாய்ந்தவராய் இருந்தா ரென்பது விளங்கும். ஒட்டக்கூத்தர் கவிச் சக்கர வர்த்தியாய் விளங்கினு ரெனினும், அவருக்குக் கூறப்படும் பல வகைச் சிறப்புக்களில், வடமொழிப் புலமை யுடையவ ரென்பது

யாவரானும் மொழியப்பட வில்லை யென்பது அறியத் தக்கது. ஒட்டக் கூத்தரியற்றி யுள்ள நூல்களில், வடசொற்களும் வட சொற்றொடர்களும் பல்கி யிருக்கின்றன வெனினும், அவற்றான் அவர் வடமொழிப் புலமை யுடையவ ரென்பது ஊகித்தறிவதற் கியலா திருப்பதும் அறியத் தக்கது.

இனித், தக்கயாகப் பரணி யுரையில், விக்கிரம சோழனைப் பாராட்ட வெழுந்த பரணி நூல் ஒட்டக்கூத்தரால் இயற்றப் பட்டதெனக் காணப்படுவது எழுதுவோர் பிழை யாகும். கவிரா சன் என்பது வீழ்ந்து போகவே, அப் பெயர் வரைய வேண்டிய விடத்து, ஒட்டக்கூத்த ரென்று ஏடெழுதுவோர் வரைந்து விட் டாரென்க. ஒட்டக்கூத்தர், குலோத்துங்கன் பிள்ளைத் தமிழில், அப் பரணியை இயற்றிய புலவன் கவிராசன் என்று கூறியிருப் பது அறிக. இக் குறிப்பை நீக்குவோ மாயின், தக்கயாகப் பரணி யுரையில் ஒட்டக்கூத்தர் பெயரே குறிக்கப்படவில்லை யென்பது உண்மை யாகும்.

தக்கயாகப் பரணியை ஒட்டக்கூத்தர் இயற்றினா ரென்ப தற்கு, 'வீர சிங்காதன'ப் புராணத்தைச் சான்று காட்ட வியலும். ஒட்டக்கூத்தர், கோபத்தால், ஓர் பிச்சை யெடுக்க வந்த பண்டாரத்தைக் கொல்ல, அப் பண்டாரத்தின் சீடர்கள், பழிக்குப் பழி வாங்கும் கருத்துடன், ஒட்டக்கூத்தரைத் தொடர, அவர் அரசன் கோயிலில் அடைக்கலம் புகுந்தும், செய்வதற்கோர் வழி யில்லாமல் அச் சீடர் பின் செல்லுங்காலை, அவர் கையினின்று தப்பியோடி, ஓர் காளியின் ஆலயத்திற் புகுந்து, தாளிட் டிருந்து, காளியிடம் முறையிட்டு, அக் காளியின் கருணையால் தக்கயாகப் பரணி பாடிக், கொலைபுரிய விருந்தோரை மகிழ்வித்து உய்யலுற்றார் என்பது. இத் தகையதோர் வரலாறு ஒட்டக்கூத்தர் இயற்றிய பிற நூலுக்கும் கூறுவது காண்க. இதனை யாராய்ச்சியாளர் ஒப்பார். இது புராணகாரர் கற்பனை யென்பது தெளியப்படும். இதற்குக் காரணத்தை நோக்கின், நூலாசிரியர்கள் தத்தம் பெயரைத் தமது நூலில் வரைவது தற் புகழ்ச்சியா மெனக் கருதியதே யாகும் என்பது புலப்படும். சிறப்புப் பாயிர வரலாற்றான் நூலாசிரியர் பெயர் அறியலாகும்.

தக்கயாகப் பரணிக்குச் சிறப்புப் பாயிரம் இறுதியில் வாழ்த்துப் பாடலாகக் காணப்படுவது. ஆசிரியர் பெயர் கூத்தன் கவிச் சக்கரவர்த்தி யென்று கூறப்பட்டுளது. இவ் வாழ்த்துப் பாடற் பகுதி சிற்சில ஏடுகளில் காணப்படவில்லை யென்பது அறியத் தக்கது. இதனுன் இவ் வாழ்த்துப் பாடல் பாடியவர் உரையாசிரியராய் இருத்தல் வேண்டு மென்னலாம். இவ் வாழ்த்துப் பாடலுக்கு உரைகாணு திருப்பதும் இக் கருத்தை வலியுறுத்தும். தாமுரைத்த பாடலுக்குத் தாமே உரை வகுக்காராதலின், பாயிரம் பாடிய உரைகாரர் உரையே இது காறுங் கிடைக்கும் உரைகளிற் பழமையானது. இந் நூலாசிரியர் ஒட்டக்கூத்தரா யிருப்பின், அவர் அங்ஙனம் கூறியிருப்பார் என்பது திண்ணம். அவர் கருத்தையும் நோக்கின், இந் நூலியற்றியவர் வடமொழிப் புலமையுடைய கூத்தர் என்பவ ராவர் என்பது நன்கு விளங்கும். ஒட்டக்கூத்தருக்கு இத்தகைய சிறப்பு கூறப்படுகிற தின்மையின், யாம் மேற் காட்டியவாறு, அம்பிகாபதியாகிய கூத்தரே யாவ ரென்க. ஜெயங்கொண்டார் சக்கரவர்த்திப் பட்டம் பெற்றிருப்பது போல, அம்பிகாபதியும் சக்கரவர்த்தி யென்னும் பட்டம் பெற்றா ராவர். இவர் மற்றும் சில நூல் இயற்றி யுள்ளா ரெனத் தெரிகிறது. இவை இக் காலத்துக் கிடைத்தற் கரிதாயிற்று.

தக்கயாகப் பரணி யாசிரியர் ஒட்டக் கூத்த ராகா ரென்று காலஞ் சென்ற திரு. சூரிய நாராயண சாஸ்திரி யவர்களும், தாம் பதிப்பித்த கலிங்கத்துப் பரணியின் முகவுரையில், வரைந்திருப்பது ஈண்டறியற் பாலது. கலிங்கத்துப் பரணி யேடுகள் ஒன்பது கிடைத்துள்ளன வென்பர். அவற்றுள் ஒன்றிலேனும் ஆசிரியர் பெயர் காணப்படாமையால், அதன் ஆசிரியர் ஜெயங்கொண்டா ராவர் என்பதை நிறுவ முயன்றார். அக் காலத்தில் கலிங்கப் பரணியை ஒட்டக் கூத்தர் இயற்றினு ரெனச் சிலர் கருதுவதை மறுக்க லுற்றவர், தக்கயாகப் பரணி யாசிரியரும் ஒட்டக்கூத்தராவர் என்பார் கருத்தையும் எடுத்துரைத்து, இதன் ஆசிரியர் தமிழ்க் கூத்த ராவர் என்றார். அவருரை வருமாறு: 'இக் கலிங்கத்துப் பரணியினை இயற்றினர் ஒட்டக் கூத்த

ரென்பது ஒரு சாரார் துணிபு. இது, யாம் மேற்கூறிய காரணங் களினாலே, சிதையுண்டொழியுமாற்றறிக. அன்றியும், ஒட்டக் கூத்தரது செய்யுணடையும், இந் நூலினது செய்யுணடையும் வேறுபடுமாறு மோர்ந் தறிக. மற்று, ஒட்டக் கூத்தர் செய்த பரணிகளும் வேறுள. அவை அண்டத்துப் பரணியும் பிறவு மாம். இனிக், கூத்தன் கவிச் சக்கரவர்த்தி யென்ற தமிழ்ப் புலவர் செய்த தக்கயாகப் பரணி யென்றொரு நூலுளது. இக் கூத்தன் கவிச் சக்கரவர்த்தியே ஒட்டக் கூத்த ரெனச் சிலர் கூறு நிற்பர். அஃதெவ்வாறாயினும் ஆகுக. இந் நூலினைப் போலவே யதுவும் பகுக்கப்பட்டுச், சொற்சுவை பொருட்சுவை களிற் சிறந்து திகழுறுகின்றது. அதற்கோரரிய வரும்பத வுரையு முளது. அதனை யிப் பரணியினொடு சீர்தூக்கி யாய்கு நர்க்கு, இரண்டனது நயங்களும் இனிது புலப்படும்.' என்பது. அக் காலையில் தக்கயாகப் பரணி அச்சுவாகன மேறும விருந்தது. அவருக்குக் கிடைத்திருந்த ஏட்டில், ஒட்டக் கூத்தர் பெயர் காணப்பட வில்லை யென்பது தெளிவாம். இதுபோது அச் சேறிய தக்கயாகப் பரணியில், ஆசிரியர் பெயர் ஒட்டக் கூத்த ரென்று தலைப்பிடப்பட்டிருப்பது எமக்கு விளங்க வில்லை. இத் தலைப்பு இட்டதற்குப் பதிப்பாசிரியர் காரணம் காட்டினாரல்லர். பதிப்பாசிரியர் உத்தேசமாக இப் பெயரைக் கொண்டன ரென்று கூறவேண்டி யிருக்கிறது. இது பொருந்துமா வென்பது ஓர்தற்குரியது. இதனுன் ஆராய்ச்சியைப் பதிப்பாசிரியர்கள் கையாளவேண்டு மென்பது உணர்த்தப்பட்ட தென்க.

இனிக், காலிங்கராயன் என்னும் பட்டத்தினைப் பாண்டிய மன்னரின் படைத் தலைவனும் வகித்திருந்த காரணத்தானும், குலசேகரன் என்னும் பெயர் பாண்டிய மன்னரிற் பலர் வகித் திருந்தமையானும், 'குலசேகர ரத்நாகரம்' என்னும் நூலைத் தொகுத்தவன் பாண்டிய சேனுபதி யாவன் எனத் திரு. மு. இராகவ ஐயங்கார் உரைத்துப் போந்த முடிபை நோக்கு வாம்.

காலிங்கராயன் என்னும் பட்டம் வகித்தவ னொருவன் ஜடாவர்ம சுந்தர பாண்டியன், ஜடாவர்ம வீர பாண்டியன், மாற

வர்மன் குலசேகரன் முதலியோர் காலத்தில் விளங்கினவனுவன். இக் காலிங்கராயனின் பெயர் மாற வர்மன் குலசேகரன் சிங்காதனத்திற்கு இடப்பட்டிருந்த தெனத் தெரிகிறது. இம் மன்னர்கள், கி. பி. 1251 முதல் 1304 வரையில், ஒருவர் பின் ஞெருவராக ஆட்சி புரிந்தனர்.

கருமாணிக்கன் என்பா ஞெருவனும் இக்காலத்தில் போர்ச் சிறப் புடையவனுக விளங்கினுன். 'கருமாணிக்கன் கோவை' யென்னும் நூலில் இவன் பாராட்டப்பட் டுள்ளான். இவ னுக்குத் தோண்டையர் கோன் என்னும் பட்டம் வழங்கப்படு கின்றது. இவனுக்குக் காலிங்கர் என்னு மொரு தமையன் இருந்தா னென்று அக் கோவை கூறும். இவ் விருவருக்கும் உரிய வூர்கள் கப்பலூ ரெனவும் துவராபதி யெனவும் வழங்கப்படுவன வாகு மென்று தெரிகின்றன. இவ் விரு வூர்களும் புதுக்கோட் டைச் சீமையில் உள்ளன வென்பர். கப்பலூருக்கு உலகளந்த சோழ நல்லூ ரென்னும் ஓர் பெய ருண்டு. இது முந்நூற்றுக் கூற்றத்தின் கண்ணதோ ரூராகும்.

இக் காலிங்க வீரனின் இயற்பெயர் ஆதித்தன் கணபதி யாழ்வான் எனவும், இவன் வாணதராயன், கப்ப லூருடையான், காடுவெட்டி என்னும் பட்டங்கள் உடையவனெனவும் சேலம் சில்லா ஆதனூரிற் கிடைக்கும் சாசனங்களால் அறியலாம் (419 & 448 of 1913). இவன் அண்ட நாட்டையும் ஆட்சி புரிந்தவனுக, மதுரையில் கிடைக்கும் (50 of 1890) சாசனத்தால், அறியலாம். இக் காலிங்கன் சாசன மொன்று நேல்லூரிற் கிடைக்கின்றது. இது குலசேகரன் காலத்தது. இதில், முண்ட நாட்டில் உள்ள நிலம் தானம் செய்யப்பட்டது கூறப்படும். முண்ட நாடு என் பது நேல்லூர் சில்லாவின் வடக்குத் திக்கிலுள்ள பகுதி யாகும். இதனுன், இப் போர்வீரன் கலிங்கத்தை வென்றவ னுவன் என்பது பெறப்படும்.

கருமாணிக்கன், தன் கோவையில், 'எண்ணெண் கலை தெரிந்தவன்' என்று புகழப்படுகின்றுன். ஆயினும், அவன் வடமொழி யறிந்தவன் என்றுவது, காலிங்கர் கோன் என்னும் பட்டம் உடையவனுக வாவது கூறப்படா திருப்பது குறிக்கத் தக்கது.

இவன் தொண்டையர்கோன் என்றும்,' இவன் தமையன் காலிங்கர் கோன் என்றும் தனிச் சிறப்பும் பெற்றவராய்த் திகழ்கின்றனர். காலிங்கர் கோன் வடமொழி யறிவுடையவனுய் இருந்தா னென்பதற்குச் சான்றில்லை யாகலின், 'குலசேகர ரத்நாகரம்' என்னும் நூல் தொகுத்தவன் பாண்டியன் சேனுபதி யாகா னென்க. இவ் விரு வீரர்கள் வன்னியராகிய பல்லவ குலத்தவ ரென்பது கோவை யுணர்த்தும். மற்றும், உபய குலத்தவ ரென்றுங் கூறப்படுகின்றுர். இவருக்குத் துவராபதி என்ற வூரும் உரியதா யிருந்தமையால், இவர்களின் தாய் வமிசம் யாதவர் குல மாகும். யாதவ குலத்தவர்கள் தமது தலைநகர் களுக்குத் துவரை யென்னும் பெயரிட்டுக் கொள்ளுவர் போலும். இக் காலிங்கர் கோன் அண்ட நாட்டை ஆளலுற்று, ஆங்கொரு துவராபதியைச் சமைத்தனன் போலும். இத் துவராபதி வையையை அடுத்திருந்த தாகும். இதனுன் கோவையில் வை யை சூழப்பட்ட நாடெனச் சிறப்பிக்கப்பட லாயிற்று. அண்ட நாடு என்பது மதுரைக்கு மேற்கி லிருந்ததோர் பகுதி யாகும். துவரை யென்பது பாண்டி நாட்டகத்துப் பலவூர்களுக்கு இடப் பெற்றிருந்தமை, துவராபதி, வண்டுவராபதி என்னும் பெயர் களால் அறியலாம். 'குலசேகர ரத்நாகரம்' இயற்றியவன் தனிப் பல்லவர் குலத்தவனுவன். இக் காலிங்கர்கோன் உபய குலத்தவனுய் விளங்குகின்ற தறிக.

இனிக், காலிங்கராயன், காலிங்கர் கோன் என்னும் சிறப்பு வடநாட்டரசரை வென்றவர் பூண்ட பெய ராகு மென்பதை யறிக. இது குலப் பெயராக வழங்கப்பட வில்லை யென்பதும் உணரற்பாற்று.

# மெய்கண்ட சாத்திர மாநாடு

சைவ சித்தாந்த உண்மைகளை உள்ளவாறு உணர்தல் எளிதன்று. இலக்கண இலக்கிய நூல்கள், அளவை நூல்கள் (தருக்க நூல்கள்), பற்பல சமய நூல்கள் எல்லாம் நன்கு ஓதித் தெளிந்து, சிவஞான போதம், சிவஞான சித்தியார் முதலான மெய்கண்ட நூல்கள் பதினான்கையும் பலகாலும் ஆராய்ந்தறிந்த பின்னரே, சைவ சித்தாந்த உண்மை விளங்குவதாகும். இவ்வளவுங் கற்றுத் தெளிபவர் இத் தமிழ் நாட்டகத்து அரியராயிருத்தலினாலே தான், சைவ சித்தாந்தம் இதில் எங்கும் பரவவில்லை. இக் குறையை நீக்குதற்காகவே இக் கழக அறநிலையங்களில் ஒன்றான சைவ சித்தாந்த சங்க வாயிலாக மெய்கண்ட சாத்திர மாநாடு ஒன்றைக் கூட்டி ஆராயத் திருவருளை முன்னிட்டுத் தீர்மானித்துள்ளோம்.

இவ் எண்ணம் நிறைவேறும்படிக் கட்டுரை எழுதியனுப்ப இசைந்த மெய்யன்பர்கள் தங்கள் அரிய சொற்பொழிவுக் கட்டுரைகளை, 10—4—41 தேதிக்குள் இயன்றவரை ஆராய்ந்து, எளிய செந்தமிழ் உரை நடையில், முப்பொருளின் உண்மையிலக்கணம் உணர்ந்தாரும் உணராதாரும் தெளிந்து கொள்ளும்படிச், செவ்விய முறையில் எழுதி யனுப்பும்படி அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

சைவ சித்தாந்தப் பற்றுடையவர்கள், சைவ சித்தாந்த ஆராய்ச்சி வல்ல அறிஞர்கள் முகவரி (விலாசம்)களை அன்பர்கள் சிலர் எழுதியனுப்பி உதவிபுரிந்து வருகின்றார்கள். ஏனைய அன்பர்களும் அவ்வாறு தெரிந்தவரை யெழுதி யனுப்பின் நலம் பயக்கும்.

**வ. திருவரங்கம்,**
*அமைச்சர்.*

# டாக்டர் ஐசக் தம்பையா

## சிறந்த கலா பண்டிதர் பிரிவு

இலங்கையின் பிரமுகர்களில் முதலணியில் வைத்தெண்ணப்படும் கலாபண்டிதராக விளங்கிய டாக்டர் ஐசக் தம்பையா அவர்கள் சென்ற புதன்கிழமை இரவு கொழும்பிலே தேகவியோகமானர் என்று கேட்டு வருந்துகின்றோம்.

டாக்டர் தம்பையா இறக்கும்போது வயது 71. கிறிஸ்த சமய குருவாக நியமனம் பெற்றிருந்தபோதிலும், அவர் சமயம், தத்துவம், இலக்கியம், அரசியல் ஆகிய துறைகளில் ஈடுபட்டுப் பெரும்புகழீட்டினர்.

### வாழ்க்கை

1869-ம் ஆண்டு ஆவணி மாதம் 19-ந் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்தார் டாக்டர் ஐசக் தம்பையா. யாழ்ப்பாணம் செயின் ஜோன்ஸ் கலாசாலையில் கல்வி கற்கும்போதே இவர் மிகுந்த திறமை காட்டினர். பின்னர் கொழும்பு சென்று செயின் தோமஸ் கல்லூரியில் கற்றுத் தேறினர்.

டாக்டர் தம்பையாவுக்கு இளமையிலேயே பத்திரிகைக் கலையிலும் இலக்கியங்களிலும் பெரும் பற்றுதவிருந்தது. 1893-ம் ஆண்டு அவர் 'சிலோன் றிவியூ' என்ற ஒரு ஆங்கில மாசிகையைத் தோற்றுவித்து அதில் இலங்கையின் பெரியார் பலரது வரலாறுகளைத் தமது கூர்மதிகொண்டு பொறித்து வந்தார். இது இரண்டு வருடகாலம் நடைபெற்றபின் டாக்டர் தம்பையா 'பீரியட்' என்ற ஒரு பத்திரிகையை 1896-ம் ஆண்டு ஆரம்பித்தார். அது எழு வெளியீடுகளுடன் நின்றது. பின் 1899-ம் ஆண்டு முதல் 1901-ம் ஆண்டுவரையும் யாழ்ப்பாணத்தில் அப்புக்காத்தாகத் தொழில் பார்த்தார். 1912-ம் ஆண்டு இவர் சீமைக்குச் சென்று 'கிறெய்ஸ் இன்' சட்டக் கலாசாலையில்

பரிஸ்டர் பட்டம் பெற்ருர். இலங்கையிலிருந்து முதன் முதலாக 'கிரெய்ஸ் இன்' பரிஸ்டர் பட்டம் பெற்ற பெருமை டாக்டல் ஐசக் தம்பையாவுக்கே உரியது. பின் 1913-ம் ஆண்டு மலாயாவுக்குச் சென்று வழக்கறிஞராகக் கடமை பார்க்கும் போதுதான், கிறிஸ்த சமய சாஸ்திரத்தில் டாக்டர் என்ற பண்டித பட்டம் பெற்ருர். அதன்பின் இலங்கைக்கு வந்து 1924-ம் ஆண்டு ஒரு கிறிஸ்த சமய குருவாக நியமனம்பெற்ருர். 1938-ம் ஆண்டு பண்டாரவளையில் மதகுருவாயிருந்து சென்ற ஜனவரி மாதத்தில்தான் கொழும்பு செயின் செபஸ்தியானுக்கு விக்காராக நியமனம் பெற்றிருந்தார்.

சட்டப் புலவராகவும் சமயப் புலவராகவும் மாத்திரம் டாக்டர் தம்பையா இருக்கவில்லை. தமிழிலும் சைவ சமயத்திலும் இவர் கொண்டிருந்த ஆர்வமும் செய்த ஆக்க வேலைகளும் அழியாப் பொக்கிஷங்களாக நிலவுகின்றன. சமயாதீதக்கொள்கையுள்ள தாயுமானவ சுவாமிகளது திருப்பாடல்களை ஆங்கில மக்களுக்கு இவர் மொழி பெயர்த்து, Psalms of a Saiva Saint நூலாக வெளியிட்டுள்ளார். இந் நூலுக்கு எழுதியிருக்கும் முகவுரை யொன்றே இவர் தமிழ் இலக்கியங்களிலும் திருமந்திரம், தேவாரம், திருவாசகம் முதலியவற்றிலும், சைவ சித்தாந்த சாஸ்திரத்திலும் சிறந்த பாண்டித்தியம் பெற்றுள்ளார் என்பதை விளக்குகின்றது. இம்முகவுரையில் தமிழ் மொழியின் தொன்மை, வரலாறு முதலியன ஆழ்ந்த ஆராய்ச்சிப் பொருள் கொண்டுள்ளன. இந்நூல், 1925-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இதைத் தவிர A Tamil Mystic, For-gleams of God, Evangelism in Ceylon, The Salt of the Earth, In the Days of Sambasiva, Golden Verse Collection of Ceylon முதலிய நூல்கள் இவரால் எழுதி வெளியிடப்பட்டன. இவற்றைத் தவிர இவர் சட்ட நூல்கள் பலவும் வெளியிட்டுள்ளார்.

பத்திரிகையுலகில் டாக்டர் ஐசக் தம்பையா யாழ்ப்பாணத்தில் அருந் தொண்டாற்றி யிருக்கிருர். 1934—1937-ம் வருடங்களில் இவர் 'ஆங்கில இந்து சாதன'த்தில் எழுதி வந்த

'ஒபிற்றர் டிக்ரு' என்ற அரசியல் குத்து மொழியுரைகள், பல தலைவர்களையும் அரசாங்கத்தையும் கலக்கி வைத்தன. ஹாஸ்யச் சுவையுடன் உள்ளார்ந்த கருத்துக்களடக்கிக் கூரம்பு போன்ற சொற்களை யமைத்து ஆங்கில வசனங்கள் எழுதுவதில் டாக்டர் தம்பையாவுக்கு இணையானவர் இல்லை. அன்றியும் இவர் இலங்கையின் பலதிறப்பட்ட சரித்திரங்களில் மிக அக்கறையுள்ளவர். கொழும்பு 'ஒப்சேர்வர்' பத்திரிகையின் நூற்றுண்டு வெளியீட்டில் இவர் 'யாழ்ப்பாணத்தின் சென்ற நூற்றுண்டு வளர்ச்சி' என்ற விஷயமாக ஒரு கட்டுரை வரைந்துள்ளார். அது மிகவும் உபயோகமான குறிப்புக்களைக் கொண்டுள்ளது. 1938-ம் ஆண்டிலே 'உதய தாரகை' ஆங்கில வெளியீட்டின் தலையங்கங்களுக்குப் பொறுப்பா யிருந்தவர் டாக்டர் தம்பையா. 'ஈழகேசரி' ஆண்டுமடலில் இரண்டு வருடங்கள் விஷயதானம் செய்திருக்கிறுர்.

—ஈழகேசரி, இலங்கை, 23—2—41.

---

## கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

### விரிவுரைக் கூட்டம்

விக்கிரம, மாசி, ௧௩ ஆம் நாள் (24—2—41), திங்கட்கிழமை, நன்னிலம், மாநாட்டாண்மைக் கழக உயர்தரப் பள்ளித் தமிழாசிரியர், வித்துவான் திரு. சே. சிங்காரவேல் அவர்கள், 'புரவலரும் புலவரும்' எனும் பொருள்பற்றியும், திருக்காட்டுப்பள்ளி, ஆவணக் களரித் தலைவர், திரு. ஆ. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள், பி. ஏ., 'பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்து' எனும் பொருள்பற்றியும் விரிவுரை யாற்றினூர்கள்.

# நன்கொடைகள்

## புலவர் கல்லூரி

**கோட்டையூர், திரு. துரைமாணிக்கம் பிள்ளை,**
**திரு. மு. சோமசுந்தரம், அவர்கள் வழி**

கோட்டையூர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரு. | சை. அருணாசல அம்பலம் | அவர்கள் | 1 | 0 | 0 |
| ,, | க. வெ. கஸ்தூரிப் பிள்ளை | ,, | 1 | 0 | 0 |
| ,, | கி. த. பெரியையா அம்பலம் | ,, | 1 | 0 | 0 |
| ,, | நி. ப. சுப்பு ஐயர் | ,, | 1 | 0 | 0 |
| ,, | கி. மு. சின்னையா அம்பலம் | ,, | 1 | 0 | 0 |
| ,, | கி. மு. இராமசாமி அம்பலம் | ,, | 1 | 0 | 0 |
| ,, | கா. அருணாசலம் செட்டியார் | ,, | 1 | 0 | 0 |
| ,, | வி. எஸ். காசி விசுவநாதன் | ,, | 1 | 0 | 0 |
| ,, | சு. இராமசாமி நாயுடு | ,, | 1 | 0 | 0 |
| ,, | என். பெருமாள் பிள்ளை | ,, | 1 | 0 | 0 |
| ,, | எல். பெத்தாச்சிச் செட்டியார் | ,, | 1 | 0 | 0 |
| ,, | அ. சுப்பையாச் செட்டியார் | ,, | 1 | 0 | 0 |
| ,, | லெ. அண்ணாமலைச் செட்டியார் | ,, | 2 | 0 | 0 |
| ,, | ச. சோமசுந்தரம் பிள்ளை | ,, | 1 | 0 | 0 |
| ,, | என். ஏ. ஆர். என். சுப்பையாச் செட்டியார் | ,, | 2 | 0 | 0 |
| ,, | ஆர். எம். ஏ. ஆர். ஏகப்பச் செட்டியார் | ,, | 0 | 8 | 0 |
| ,, | எஸ். நடேச பிள்ளை | ,, | 0 | 8 | 0 |
| ,, | எஸ். மாணிக்க உபாத்தியாயர் | ,, | 1 | 0 | 0 |
| ,, | எஸ். எஸ். முருகப்பச் செட்டியார் | ,, | 0 | 8 | 0 |
| ,, | ராம. க. நா. இராமன் செட்டியார் | ,, | 2 | 0 | 0 |
| ,, | பி. ஆர். இலட்சுமணன் | ,, | 1 | 0 | 0 |
| ,, | உ. முத்து | ,, | 0 | 8 | 0 |
| ,, | அள. விசாலாட்சி ஆச்சி | ,, | 2 | 0 | 0 |
| ,, | பெ. சின்னையா | ,, | 0 | 8 | 0 |
| ,, | அ. சரவண அம்பலம் | ,, | 0 | 8 | 0 |
| ,, | மு. சோமசுந்தரம் | ,, | 5 | 0 | 0 |

காரைக்குடி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரு. | ப. மு. ச. சி. செந்தியப்ப நாடார் அன் கோ | அவர்கள் | 5 | 0 | 0 |
| ,, | சந்தன மகாலிங்க நாடார் | ,, | 1 | 0 | 0 |
| ,, | அண்ணுமலை நாடார் | ,, | 1 | 0 | 0 |
| ,, | அ. அனந்தசுப்பு ஆச்சாரியார் | ,, | 1 | 0 | 0 |
| ,, | பழனிச்சாமி நாடார் | ,, | 1 | 0 | 0 |

மதுரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரு. | மு. ம. ராம. முத்துச்சாமி செட்டியார் அன். கோ. | ,, | 3 | 0 | 0 |

கரந்தை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரு. | சினகுமார முதலியார் | ,, | 0 | 8 | 0 |

## திக்கற்ற மாணவர் இல்லம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரு, | என். சாமிநாத பிள்ளை, அம்மன்பேட்டை | ,, | 2 | 0 | 0 |
| ,, | இராவ் சாகிப் சேதுராமையர், நீடாமங்கலம் | ,, | 3 | 0 | 0 |
| ,, | எல். எஸ். மாணிக்கம் பிள்ளை | ,, | 3 | 4 | 0 |

| | | |
|---|---|---|
| | | நெல் கலம் |
| ,, | கிருட்டினசாமி வன்னியர், மேலைமாகாணம் | 1 |
| ,, | யாகோப்பு ஷ்டி | ¼ |
| ,, | சண்முகசுந்தரம் பிள்ளை, மகர்நோம்புச் சாவடி | 8 |

தஞ்சைக் கூட்டுறவு மின்னியக்கிப் பதிப்பகம், கரந்தை.